Registered as a Newspaper	பக்கங்கள் 6	விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM	மக்கள் தினசரி	Peoples Daily

நாதம் 04	திருவள்ளுவர் ஆண்டு 2024	ஐப்பசி 03	19-10-1993	செவ்வாய்க்கிழமை	ஒலி 243

## யாழ். பல்கலைக்கழக அனுமதி மானிய ஆணைக்குழு பாரபட்சம்

யாழ். பல்கலைக் கழகத்திற்கு மாணவர்களை அனுமதிப்பதில் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு பாரபட்சம் காட்டியுள்ளது. மாணவர்களை அனுமதிக்கக்கூடிய அளவிலும் விட பலமடங்கு அனுமதி குறைப்பு செய்யப்பட்டுள்ளது. 91 92 கல்வியாண்டில் யாழ். பல்கலைக்கழகத்திற்கு 1280 மாணவர்களுக்கு இடம்இருந்தும் 408 பேரை மட்டுமே அனுமதிக்க மானிய ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது. தென்னிலங்கை பல்கலைக்கழகங்கள் கோரிய அனுமதித் தொகையை விட கூடுதலான தொகையை அனுமதித்த மானிய ஆணைக்குழு யாழ். பல்கலைக்கழகம் கோரிய அனுமதியில் அரைவாசிக்கும் குறைவானவர்களைக் கூட அனுமதிக்கவில்லை (6ஆம் பக்கம் பார்க்க)

# 2000 தமிழ் இளைஞர்கள் கொழும்பு நகரில் கைது

(கொழும்பு)

கொழும்பு நகரிலும், புறநகர் பகுதியிலும் கடந்த சில நாட்களில் 2000 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இவர்கள் சுற்றிவளைப்புகளின் போது கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை, அங்கு மேலும் சுற்றிவளைப்புகளும், கைதுகளும் தொடர்வதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கொழும்பு நகரிலும் புறநகர் பகுதியிலும் கடந்த சில நாட்களில் 2000 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இவர்கள் சுற்றிவளைப்புகளின் போது கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தீவிர புலன் விசாரணைகளின் பின்னர் 1500 தமிழ் இளைஞர்கள் விடுவிக்கப்பட்டதாகவும், மிகுதி 500 பேரும் தொடர்ந்தும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை அங்கு மேலும் சுற்றி வளைப்புகளும், கைதுகளும் தொடர்வதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை கொழும்பில் படையினர் மேற் கொண்ட சுற்றிவளைப்பு தேடுதல்களில் கைதான 500 பேர்களில் பெரும்பாலானவர்கள் வெளிநாட்டிலிருந்து உறவினர் அனுப்பும் பணத்தைப் பெற்றுக் கொள்ள வந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதே சமயம் கைதானவர்கள் விசாரணையின்பின் படிப்படியாக விடுவிக்கப்படுவர் என பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## சட்டத்தரணிகள் சந்திப்பு

சட்டத்தரணிகள், உறுதி எழுதும் நொத்தாரிஸ் ஆகியோர்களுக்கான முக்கிய சந்திப்பு நாளை காலை 10.00 மணிக்கு கோண்டாவில் யாழ். மாவட்ட அரசியல்துறை செயலகத்தில் நடைபெற இருப்பதால் அனைத்து சட்டத்தரணிகளையும், நொத்தாரிஸ்களையும் தவறாது சமுகமளிக்குமாறு தமிழீழ நீதி நிர்வாகத் துறையினர் கேட்டுக் கொள்கின்றனர்.

## தேனெடுக்கச் சென்றோரை கொன்றுபுதைத்த ராணுவம்

(கல்குடா)

காட்டுக்குள் தேன் சேகரிக்கச் சென்ற குடும்பஸ்தர் இருவர் 14 நாட்களின்பின் சடலமாக ஒரே குழிக்குள் இருந்து மீட்கப்பட்டுள்ள அதிர்ச்சி தரும் சம்பவம் ஒன்று வாகரையில இடம்பெற்றுள்ளது.

வாகரை கதிரவெளிப் பகுதியைச் சேர்ந்த மிகப் பின்தங்கிய கிராமங்களான முடவன் கேணி, பால்சேனை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த வெள்ளைக்குட்டி மகேஸ்வரன்(40), நடராசா நாகரெத்தினம்(30) ஆகிய இருவருக்குமே இந்தக் கதி நேர்ந்துள்ளது.

அரிசி, பச்சைமிளகாய், உப்பு ஆகியவற்றுடன் கதிரவெளி 'செம்பியன்மடு' காட்டுப் பகுதிக்கு இவர்கள் தேன் சேகரிப்பதற்காகச் சென்றுள்ளனர். இரு நாட்களாகியும் இவர்கள் வீடு திரும்பாததால் அவர்களது மனைவிமார் கோமத்தலாமடு இராணுவ முகாமிற்குச் சென்று விசாரித்தபோது அப்படி எவரும் கைதாகவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

அக்காலப் பகுதியில் அங்கு வெடிச்சத்தங்கள் கேட்டதால் சந்தேகம் கொண்ட மனைவிமார் தங்களது கணவன்மார் சூடுபட்டு இறந்திருக்கலாம் என எண்ணி இராணுவ முகாமின் அனுமதி பெற்று காட்டுப் பிரதேசத்திற்குச் சென்று சல்லடைபோட்டுத் தேடினர்.

அப்போது ஓரிடத்தில் மண் குவியல் ஒன்றினைக்கண்டு அதனைத் தோண்டியபோது ஒரே மடுவில் இரு பிரேதங்கள் புதைக்கப்பட்ட நிலையில் இருப்பதைக் கண்டனர். அவர் (6ஆம் பக்கம் பார்க்க)

## பயிற்சி முகாமிலிருந்து தப்பிஓடிய இராணுவம்

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்தில் புதிதாக சேர்க்கப்பட்ட இளைஞர் ஒருவர் பயிற்சி நடைபெற்ற முகாமிலிருந்தே தப்பியோடினார். இவரை பின்னர் படையினர் பஸ் ஒன்றில் வைத்து கைது செய்தனர்.

## கழுத்தில் சயனைட்டுடன் கொழும்பில் ஒருவர் கைதாம்

(கொழும்பு)

கொழும்பில் ஜோ. ஜெயப்பிரகாஷ் எனும் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டிருப்பதாக சிறிலங்கா பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இவர் தனது கழுத்தில் சையனைட் குப்பியைக் கட்டியிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

## சிறிமாபுர தமிழ் மக்கள் வெளியேற மறுப்பு

முன்னாள் பொலிசாரை பிடிக்க

## தகவல் கொடுப்போருக்கு 5 இலட்சம் சன்மானம்

(கொழும்பு)

கொழும்பில் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்த திட்டம் வகுத்துக்கொடுக்கும் முன்னாள் சிறிலங்கா பொலிஸைச் சேர்ந்த முத்துக்குமார் மகேந்திரன் என்பவரை கைது செய்ய உதவுவோர்களுக்கு 5லட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படும் என பொலிசார் அறிவித்துள்ளனர். சிறிலங்கா பொலிசில் கடமையாற்றிய இவர் 1983இல் விடுதலைப் புலிகளுடன் இணைந்தவர் என்றும் பொலிசார் மேலும் தெரிவித்துள்ளனர்.

## சரியான பயிற்சி இன்மையே தோல்விக்குக் காரணம்

யாழ்தேவி குறித்து சிங்கள பத்திரிகை கருத்து

(கொழும்பு)

யாழ்தேவி இராணுவ நடவடிக்கைக்கு அதிகம் பயிற்சியற்ற இராணுவத்தினரையே படைத்தலைமை ஈடுபடுத்தியது. இதனாலேயேஅதிகமான இராணுவம் மரணமடைய நேரிட்டது இம்மரணங்களுக்கு அரசே காரணம். புலிகள் நன்கு விசேட பயிற்சி பெற்ற ஆயிரக்கணக்கான போராளிகளை யுத்த களத்திற்குஅனுப்பிக் கொண்டிருந்தனர் இதனாலேயே அவர்கள் எதிர்த்தாக்குதலை வீராவேசமாக மேற்கொள்ள முடிந்தது. இவ்வாறு சிங்கள பத்திரிகையான 'கப்புட்டா' தனது கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டுள்ளது.

இராணுவத்தில் பெரும்பாலானவர்கள் மூன்று மாத பயிற்சி பெற்றவர்கள். இதனால் சரியாக துப்பாக்கி பிடிக்க தெரியாத சிங்கள இளைஞர்கள் பலர் பலியாகினர். கொழும்பு அந்தியகால சேவையில் அடுக்கப்பட்ட உடல்களும் தென்பகுதி கிராமங்களில் மரண வீடுகளும் வடக்கில் இறந்த படையினரின் தொகையை காட்டுகிறது எனவும் அப்பத்திரிகை கூறியுள்ளது.

## 'வாதுவ' கப்பலில் தனியார் பொருள்களேவரும்

(யாழ்ப்பாணம்)

'வாதுவ' கப்பல் தனியார் துறையினருக்கான பொருள்களை மட்டுமே இனிமேல் ஏற்றிவரும் என தெரியவருகிறது. இக்கப்பல் குடாநாட்டிற்கு தேவையான தனியார் துறையினரால் கொள்வனவு செய்யப்பட்ட பொருள்களை மட்டுமே எடுத்துவரும்.

இதேவேளை இக்கப்பலில் இம்முறை தனியார்துறையினருக்கான சுமார் 450 துவிச்சக்கரவண்டிகளை எடுத்துவருகிறது என தெரியவருகிறது.

(பா), (நி)

## ஓட்டோ குடைசாய்ந்து மூன்று பேர் படுகாயம்

(நமது நிருபர்)

யாழ் மத்திய பேருந்து நிலையத்திலிருந்து கிளாலிக்கு ... தனர்.

இச்சம்பவம் நேற்று யாழ். செயலகத்திற்கு அண்மையில்

## மன்னார் தீவு பகுதியில்

வாகரை கதிரவெளிப் பகுதியைச் சேர்ந்த மிகப் பின்தங்கிய கிராமங்களான முடவன் கேணி, பால்சேனை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த வெள்ளைக்குட்டி மகேஸ்வரன்(40), நடராசா நாகரெத்தினம்(30) ஆகிய இருவருக்குமே இந்தக் கதி நேர்ந்துள்ளது.

அரிசி, பச்சைமிளகாய், உப்பு ஆகியவற்றுடன் கதிரவெளி 'செம்பியன்மடு' காட்டுப் பகுதிக்கு இவர்கள் தேன் சேகரிப்பதற்காகச் சென்றுள்ளனர். இரு நாட்களாகியும் வெடிச்சத்தங்கள் கேட்டதால் சந்தேகம் கொண்ட மனைவிமார் தங்களது கணவன்மார் சூடுபட்டு இறந்திருக்கலாம் என எண்ணி இராணுவ முகாமின் அனுமதி பெற்று காட்டுப் பிரதேசத்திற்குச் சென்று சல்லடை போட்டுத் தேடினர்.

அப்போது ஓரிடத்தில் மண் குவியல் ஒன்றினைக்கண்டு அதனைத் தோண்டியபோது ஒரே மடுவில் இரு பிரேதங்கள் புதைக்கப்பட்ட நிலையில் இருப்பதைக் கண்டனர். அவர்

(6ஆம் பக்கம் பார்க்க)

## பயிற்சி முகாமிலிருந்து தப்பிஓடிய இராணுவம்

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்தில் புதிதாக சேர்க்கப்பட்ட இளைஞர் ஒருவர் பயிற்சி நடைபெற்ற முகாமிலிருந்தே தப்பியோடினார். இவரை பின்னர் படையினர் பஸ் ஒன்றில் வைத்து கைது செய்தனர்.

## மன்னார் தீவு பகுதியில் தபால் ஊழியர் கைது

(மன்னார்)

மன்னார் தீவு பகுதியில் தபால் ஊழியர் ஒருவர் இராணுவத்தினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மன்னார் பிரதம தபால் அலுவலகத்தில் கடமை புரியும பிரதீபன் என்ற குடும்பத்தவர் பட்டித்தோட்டம் என்னும் இடத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாகவும், இவரை இராணுவத்தினர் கடுமையாகத் தாக்கியதாகவும் மேலும் தெரியவருகின்றது.

(நி), (பா)

## மாத்தளை நகரில் தமிழ் இளைஞர் கொலை

(மாத்தளை)

மாத்தளை மாநகரஎல்லைக்குள் கொடப்பொல சந்திக்கு அருகாமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 9.00 மணியளவில் நாகலிங்கம் ஜெகதீஸ்வரன் (வயது 22) என்ற இளைஞன் இனந்தெரியாத நபர்களால் மார்பிலும் கழுத்திலும் கத்தியால் வெட்டியும் குத்தியும் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இவரது மரணம் குறித்து மாத்தளை பொலிஸ் நிலைய குற்றப்புலனாய்வு பிரிவு பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸ் குழு விசாரணை நடாத்திவருகிறது.

## இளவாலைப் பகுதிக்கு செஞ்சிலுவை விஜயம்

(யாழ்ப்பாணம்)

இராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசமான மாதகல், இளவாலைப் பகுதிகளுக்கு யாழ் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் இன்று விஜயமொன்றை மேற்கொள்கின்றனர்.

யாழ். சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகளான செல்வி ஜெசபின், செல்வி சன்றீன் ஆகியோரே மேற்படி பகுதிக்கு விஜயம் செய்யவுள்ளதுடன் இவர்கள் இரு தினங்கள் அங்கு தங்கியிருப்பர்

(நி[, (பா)

## வாந்திபேதி நோய்க்கு ஒருவர் பலியானார்

(தொலபுரம்)

பொன்னாலை மேற்கைச் சேர்ந்த ஐந்து வயதுச் சிறுமி ஒருவர் வயிற்றோட்ட நோய் வாய்ப்பட்டு மரணமானார்.

நோய்வாய்ப்பட்ட நிலையில் சங்கானை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பொன்னாலை மேற்கு ஆறுமுகம் சர்மிளா (வயது 5) எனும் சிறுமியே அங்கு மரணமடைந்தார்.

மேலும் மரணமான சிறுமியின் சகோதரியும் வயிற்றோட்ட நோய் காணப்பட்டதன் காரணமாக யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் இவர்கள் வாந்திபேதி நோயினால் தாக்கமுற்றிருக்கலாம் எனவும் தெரியவருகிறது. (41)

---

கள் கைது செய்யப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இவர்கள் சுற்றிவளைப்புகளின் போது கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தீவிர புலன் விசாரணைகளின் பின்னர் 1500 தமிழ் இளைஞர்கள் விடுவிக்கப்பட்டதாகவும், மிகுதி 500 பேரும் தொடர்ந்தும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை அங்கு மேலும் சுற்றி வளைப்புகளும், கைது இதேவேளை கொழும்பில் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பு தேடுதல்களில் கைதான 500 பேர்களில் பெரும்பாலானவர்கள் வெளிநாட்டிலிருந்துஉறவினர்அனுப் தெரிவிக்கப்படுகிறது.

இதே சமயம் கைதானவர்கள் விசாரணையின்பின் படிப்படியாக விடுவிக்கப்படுவர் என பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## கழுத்தில் சயனைட்டுடன் கொழும்பில் ஒருவர் கைதாம்

(கொழும்பு)

கொழும்பில் ஜோ. ஜெயப்பிரகாஷ் எனும் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டிருப்பதாக சிறிலங்கா பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இவர் தனது கழுத்தில் சையனைட் குப்பியைக் கட்டியிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

# சிறிமாபுர தமிழ் மக்கள் வெளியேற மறுப்பு

(வவுனியா)

எமது மண்ணில் இருந்து எம்மை வெளியேற்றமுடியாது என சிறிமாபுர தமிழ் மக்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். இவர்களை அங்கிருந்து வெளியேற்றிவிட்டு இப் பகுதியில் சிங்களவர்களை குடியேற்ற அரச அதிகாரிகள் எடுத்த முயற்சிக்கு எதிராகவே அவர்கள் இவ்வாறு எதிர்ப்புக் குரல் எழுப்பியுள்ளனர்.

இக் கிராமத்திலுள்ள 39 குடும்பங்களில் 23 குடும்பங்களிடம் இப் பகுதி அவர்களின் சொந்த இடம் என்பதை நிரூபிக்கக்கூடிய ஆவணங்கள் இருந்தபோதிலும் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் புதிதாக அமைக்கப்பட்ட ஆயிரம் வீட்டுத்திட்டத்தில் ஒன்றானசிறிமாபுரவீடமைப்பு திட்டத்தை விரைவில் சிறிலங்கா ஜனாதிபதி திறந்து வைக்க உள்ளதாலேயே இப் பகுதியில் குடியிருந்த தமிழர்கள் வெளியேற்றப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

''இது எமது சொந்தமண். இங்கிருந்து எவரும் எம்மை வெளியேற்ற முடியாது'' என இப் பகுதி பொதுமகன் ஒருவர் தெரிவித்தார். சிறிமாபுர வீடமைப்பு திட்டத்தில் இருந்த 39 தமிழ் குடும்பங்களையும் உடனடியாக வெளியேறும்படி ஒக்டோபர் முதலாம் திகதி ஒப்பமிடப்பட்ட கடிதத்தில் வவுனியா பிரதேச செயலாளர் வி. அமுதலிங்கம் காத்தார் சின்னக்குளம் கிராமசேவகரை பணித்துள்ளதாகவும் அப்படியும் அவர்கள் வெளியேறாவிடின் பொலிசாரின் உதவியை நாடும்படி அறிவுறுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே ஒருமாதத்திற்கு முன்னர் இக் குடும்பங்களை வெளியேறுமாறு வாய்மூலமாக பணிக்கப்பட்டிருந்தது. இப்போது எழுத்துமூலமாக பணிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

1977ஆம் ஆண்டு இனக்கலகத்தையடுத்து மலையகத்திலி

(6ஆம் பக்கம் பார்க்க)

## இன்று படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்

### பல்கலைக்கழக அனுமதி

## மாணவர் தொகை வீழ்ச்சிக்கு திறமைக் குறைவு காரணமல்ல

(மானிப்பாய்)

சென்ற ஆண்டில் (1992 ஏப்பிரல்) நடந்த விசேடபரீட்சையில் தோற்றி சென்ற வாரம் வெளியிடப்பட்டவெட்டுப் புள்ளியின் மூலம் பாதிப்படைந்தவர்களுக்கான கூட்டம் நேற்று யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்றது. இக் கூட்டத்தில் பாதிப்படைந்த மாணவர்களும், அவர்களின் பெற்றோர்களும் மற்றும் கலைப் பீடாதிபதி, மருத்துவ பீடாதிபதி, விஞ்ஞான பீடாதிபதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய கலைப் பீடாதிபதி பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை, ''தமிழ்மாணவர்கள்1972ஆம் ஆண்டிலிருந்து பெரும் கல்விப் பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர். வழமையாக மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்கு அனுமதிக்கப்படும் போது- குறிப்பாக ஒரு பீடத்துக்கு மாணவர் அனுமதிக்கப்படும் போது தேசிய ரீதியாக 40வீதமும், மாவட்ட ரீதியாக 55வீதமும், பின்தங்கியமாவட்டங்கள் என்ற அடிப்படையில் 5 வீதமும் ஆன மாணவர்களே அனுமதிக்கப்படுகின்றனர். ஆனால் இம்முறை மாணவர்களுக்கான அனுமதியில் பெருத்த வீழ்ச்சி நிலையினை அடைந்துள்ளது'' என்று கூறினார்.

மேலும் மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் பாலசுப்பிரமணியம் அங்கு உரை நிகழ்த்துகையில், 'இம்முறை மருத்துவ பீடத்துக்கான அனுமதி ஏறக்குறைய 50 வீதமாக வீழ்ச்சி அடைந்துள்ளது. 91 92கல்வி ஆண்டில் மருத்துவபீடத்துக்கு 106 மாணவர்கள் அனுமதிக்

(6ஆம் பக்கம் பார்க்க)

## இணைப்புக்குழு கூட்டம்

(மானிப்பாய்)

92/93 கல்வியாண்டில் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான ஒருங்கிணைப்புக்குழுவின் முக்கிய கூட்டம் எதிர்வரும் 27 ம் திகதி புதன்கிழமையாழ் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் பிற்பகல் 4 மணிக்கு

(6ஆம் பக்கம் பார்க்க)

---

களை யுத்த களத்திற்கு அனுப்பிக் கொண்டிருந்தனர் இதனாலேயே அவர்கள் எதிர்த்தாக்குதலை வீராவேசமாக மேற்கொள்ள முடிந்தது. இவ்வாறு உடல்களும் தென்பகுதி கிராமங்களில் மரண வீடுகளும் வடக்கில் இறந்த படையினரின் தொகையை காட்டுகிறது எனவும் அப்பத்திரிகை கூறியுள்ளது.

## 'வாதுவ' கப்பலில் தனியார் பொருள்களேவரும்

(யாழ்ப்பாணம்)

'வாதுவ' கப்பல் தனியார் துறையினருக்கான பொருள்களை மட்டுமே இனிமேல் ஏற்றிவரும் என தெரியவருகிறது. இக்கப்பல் குடாநாட்டிற்கு தேவையான தனியார் துறையினரால் கொள்வனவு செய்யப்பட்ட பொருள்களை மட்டுமே எடுத்துவரும்.

இதேவேளை இக்கப்பலில் இம்முறை தனியார்துறையினருக்கான சுமார் 450 துவிச்சக்கரவண்டிகளை எடுத்துவருகிறது என தெரியவருகிறது,

(பா), (நி)

## ஓட்டோ குடைசாய்ந்து மூன்று பேர் படுகாயம்

(நமது நிருபர்)

யாழ் மத்திய பேருந்து நிலையத்திலிருந்து கிளாலிக்கு பயணிகளை ஏற்றிச் சென்ற சிற்றூர்தி ஒன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் விபத்துக்குள்ளானதில் சிற்றூர்தி குடைசாய்ந்ததால் அதில் பயணம் செய்த மூவர் காயமடைந்தனர்.

இச்சம்பவம் நேற்று யாழ். செயலகத்திற்கு அண்மையில் நடந்தது இதன்போது சிற்றூர்தி ஓட்டுநரும் அதில் பயணம் செய்த இருவருமே காயமடைந்தவர்களாவர்.

(சி)

## ஆஸ்பத்திரி ஜெனறேற்றர் ஏற்றுவதில் இழுபறி நிலை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனாவைத்தியசாலைக்கு பிரித்தானிய அரசினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட 200 கிலோவாற் மின்பிறப்பாக்கிகொழும்புத் துறைமுகத்தில் வைத்து ''வாதுவ'' கப்பலில் ஏற்றுவதில் இழுபறி நிலவியதாக நேற்று கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

எனினும் அங்கிருந்து புறப்பட்டு துருத்தித்துறை நோக்கி வந்து கொண்டிருக்கும் அக்கப்பலில் மேற்படி மின்பிறப்பாக்கி ஏற்றப்பட்டுள்ளதா? என்பது குறித்து ஊர்ஜிதமான செய்திகள் எதுவும் கிடைக்கவில்லை. [பா] [நி]

## அதிகாரியின் அசட்டை நியமனத்தில் தாமதம்

அரச அதிகாரி ஒருவரின் அசட்டை காரணமாக வடக்கு கிழக்கு மாகாண சபையால் எழுதுவினைஞர் சேவைக்கும் அதனோடிணைந்த சேவைக்கும் யாழ் மாவட்டத்திலிருந்து தெரிவானோர் தமது பதவிகளைப் பொறுப்பேற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மேற்படி பதவிக்கு நியமனம் பெற்றவர்கள் நேற்றையதினம் நியமனத்தைபொறுப்பேற்கும்படி பணிக்கப்பட்டிருந்ததுடன் இது தொடர்பான நியமனக் கடிதங்களும் ஏறகனவே குறிப்பிட்ட அதிகாரியிடம் வழங்கப்பட்டிருந்தது. அவர் அதனை நேற்றைய தினமே தபாலில் சேர்த்துள்ளார் எனத் தெரியவருகிறது.

இதனால் மேற்படி நியமனம் கிடைக்க வேண்டிய பலர் தமக்குரிய நியமனக்கடிதம் கிடைக்காதமையினால் பதவிகளைப் பொறுப்பேற்க முடியாதுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## 'ராவய' செய்தியாளர் பி. பி. ஸிக்கு பேட்டி

(கொழும்பு)

''யாழ்தேவி'' யுத்த நடவடிக்கையை நேரடியாக அவதானித்த சிங்கள செய்தியாளர்கள் பி. பி ஸியின் சிங்கள சேவைக்கு மேற்படி யுத்த நடவடிக்கை குறித்து பேட்டியளித்துள்ளனர். இப்பேட்டியில் தோல்விகண்ட யாழ் தேவி யுத்தநடவடிக்கை நடைபெற்ற காலத்தில் தாம் யாழ்பாணத்தில் தங்கியிருந்ததாகவும் அக்காலப் பகுதியில் தாம் இந்த யுத்தம் தொடர்பாக நேரடியாக அவதானித்தவற்றையும், யுத்தத்தின் தோல்விகள் குறித்தும் விளக்கமளித்துள்ளனர். அத்துடன் மேற்படி யுத்த நடவடிக்கையை விடுதலைப் புலிகள் எதிர்கொண்ட விதம் குறித்தும்

(6ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**துளிர்**

தமிழ்நாடு, புதுவை அறிவியல் இயக்கம் இணைந்து வெளியிடும் சிறுவர்களுக்கான அறிவியல் மாத இதழ் மாணவர்களுக்கு அதிக பயன் தரக்கூடியது. கிடைக்கும் இடம் வசந்தா புத்தக நிலையம் 405, அருச்சுனா வீதி புதியபஸ் நிலையம், யாழ்ப்பாணம்.
(6315)

**யாழ்ஓசை இசை வகுப்புகள்**

சகல புதிய இசை வகுப்புக்களும் 24-10-93 விஜயதசமியன்று ஆரம்பிக்கப்படவுள்ளன. மேலதிக விபரங்களுக்கு அலுவலகத்தில் தொடர்பு கொள்ளவும். யாழ்ஓசை, 61, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
(6306)

**விற்பனையாகிறது**

நவராத்திரியை முன்னிட்டு விற்பனையாகிறது. நவராத்திரி தோத்திரப் பாமாலை வித்துவான் சி. குமாரசாமி B.A. வெளியீடு விற்பனை பூபாலசிங்கம் புத்தகசாலை விலை 20/- மட்டும் (சி 7731)

## பனம் விதை நாட்டல்

[தென்மராட்சி]

உள்ளூர் உற்பத்தியின் மூலதனத்தினை பெருக்கும் நோக்கத்தினைக் கொண்டு கொடிகாமம் பனை, தென்னை, வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கத்தினர் தமது பராமரிப்பில் பனம் விதைகளை நாட்டி வருகின்றனர்.

முதல் நடவடிக்கையாக அல்லாரை வெள்ளாம் போக்கட்டிப் பகுதிகளில் கடந்த சனியன்று பனம் விதை நாட்டல் வைபவம் ஒன்று சங்கத்தின் தலைவர் பெ. சுப்பிரமணியம் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது. [86]

### கொலரா பாதிப்பு

[தென்மராட்சி]

கெற்பலி பண்டிதர் குடியிருப்பு அகதிமுகாமில் வயிற்றோட்ட நோயினால் ஒருவர் பாதிக்கப்பட்ட நிலையில் அண்மையில் சாவகச்சேரி

## கூட்டுறவு திணைக்களங்களும் பிரதேச செயலகத்தின் கீழ் வரும்

### கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்

(திருக்கோணமலை)

கூட்டுறவுத் திணைக்களமும் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் பிரதேச செயலாளர்களின் கீழ் கொண்டு வரப்படவுள்ளது. கூட்டுறவுத் திணைக்களத்தில் இருக்கும் ஊழியர்கள் பிரதேச செயலாளர் அலுவலகங்களிற்கு மாற்றப்படுவர். ஜனவரி மாதம் முதல் கூட்டுறவுத் திணைக்களம் ஒரு ஆணையாளருடனும் ஒரு உதவி ஆணையாளருடனும் இயங்கும்.

இத்தகவலை வடக்கு-கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் எஸ். வேலாயுதம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்கள், கூட்டுறவு நிதியிலிருந்து கடன் பெற்ற கூட்டுறவு சங்கங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள் மற்றும் மாவட்ட கூட்டுறவுச்சபைத் தலைவர்கள் செயலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்ட மாநாடு அண்மையில் திருக்கோணமலை கூட்டுறவுகல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றிய கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மேலும் கூறுகையில், இந்த நடவடிக்கை நாட்டின் நிர்வாகத்தை பரவலாக்கும் திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்டாலும் வடக்கு கிழக்கு மாகாணங்களைப் பொறுத்தவரையில் மிகவும் பாதிப்பானதாகும். எனவும் குறிப்பிட்டார்.

## தீவுப்பகுதிக்கான தபால்கள் இன்று எடுத்துச்செல்லப்படும்

(யாழ்ப்பாணம்)

தீவுப்பகுதிகளுக்கான தபால்கள் இன்று யாழ்பிரதான தபாலகத்தில் இருந்து எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அவ்வட்டாரங்கள் தெரிவித்தன

இன்றுகாலை 8.30மணிக்கு யாழ். பிரதான தபாலகத்தினால் சுமார் 10 தபால்பொதிகள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளன. இவற்றை சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் தீவுப்பகுதிகளுக்கு எடுத்துச் சென்று ஒப்படைக்கவுள்ளதாக தெரியவருகின்றது. (பா), (நி)

## நரோமா கப்பலில் செல்ல அரச ஊழியர் முண்டியடிப்பு

(யாழ்ப்பாணம்)

நாளை வந்து சேருமென எதிர்பார்க்கப்படுகின்ற ''நரோமா'' கப்பலில் பயணம் செய்ய அரச ஊழியர் முண்டியடிப்பதாக தெரிய வருகின்றது.

''குமாரி'' கப்பலின் வருகை தாமதமாகுவதனால் அக்கப்பலிற்கு பதிவு செய்தவர்கள் மற்றும் ஏற்கனவே 'நரோமா' கப்பலிற்கு பதிவு செய்தவர்கள் என பல தரப்பினரும் முண்டியடிப்பதால் யாழ். செயலகம் ஓர் இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

இந்நிலைமைக்கு கடந்த சில கிழமைகளாக ''நரோமா'' கப்பலின் பயணிகள் சேவை இடைநிறுத்தப்பட்டமையே காரணம் என தெரிவிக்கப்பட்டது. (பா)

## இன்று மாலையில்தான் வாதுவ கப்பல் வந்து சேருமாம்

(யாழ்ப்பாணம்)

கொழும்புத் துறைமுகத்தில் இருந்து புறப்பட்ட ''வாதுவ'' கப்பல் இன்று மாலையே காங்கேசன்துறைக்கு வந்து சேருமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இக்கப்பலில் யாழ். பிரதான தபாலகத்திற்கான சுமார் 611 தபால் பொதிகள் எடுத்து வரப்படுவதாக யாழ். பிரதான தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை யாழ். பிரதான தபாலகத்தினால் கொழும்பு தபாலகத்திற்கு ''குமாரி'' கப்பலில் அனுப்பி வைக்கப்பட்ட தபால் பொதிகள் காங்கேசன்துறைமுகத்தில் தவம் கிடப்பதாக தெரியவருகின்றது. (பா), (நி)

## அரச அலுவலகங்களை அம்பாறைக்கு மாற்ற முயற்சி

## மாணவர் உள உணர்வு கலைவடிவாகின்றது

### மன்னார் அரசியல்துறைப் பொறுப்பாளர்

மாணவர்கள் தாம் இன்று கல்வி கற்பதில் எதிர் நோக்கும் பிரச்சினைகளின் உள்ளத்து உணர்வுகளை கற்றுக் கொண்டிருக்கையிலேயே கலை வடிவில் வெளிப்படுத்துகின்றனர்.

இவ்வாறு கடந்த 15 ஆம் திகதி மன்னார் பண்டிவிரிச்சான் பாடசாலை மைதானத்தில் வறிய மாணவர்களின் கல்வி மேம்பாட்டு நிதிக்காக விடுதலைப் புலிகள் மாணவரமைப்பினால் நடாத்தப்பட்ட கலை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் மன்னார் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. கணேஸ் தெரிவித்தார்.

மாவட்ட மாணவரமைப்பு துணைப் பொறுப்பாளர் திரு. ரவிராஜ் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் மங்கள விளக்கினை மன்னார் மாவட்ட தளபதி திரு. கதிர் ஏற்றி வைத்தார்.

யாழ் பல்கலைக்கழக புவியியல்துறை விரிவுரையாளர் திரு. ஆனந்த சோசை, மன்னார் முருங்கன் பிரதி அதிபர் திரு. டேவிற், மன்னார் பெரியபண்டிவிரிச்சான் அ. த. பாடசாலை அதிபர் திரு. அந்தோனிமுத்து ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து அபிநயம், நடனம், மற்றும் சமகால கல்வி நிலையை சித்திரிக்கும் ''சமூகத்தின் அங்கம்'' எனும் குறியீட்டு நாடகம், இன்னிசை கானம் என்பன கல்விக்கழக மாணவர்களினாலும், பண்டார வன்னியன் நவீன வரலாற்று அரசியல் நாடகம் முருங்கன் கலைக் குழுவாலும் மேடையேற்றப்பட்டன.

**கோப்பாய் கிறீஸ்தவ கல்லூரி**

**புதிய வகுப்புகட்கான ஆண்டு 6,9க்கான அனுமதி-1994**

மேற்படி வகுப்புகளில் அனுமதி பெறுவதற்கான விண்ணப்பப்படிவங்களைக் கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்.

**விண்ணப்ப முடிவு திகதி: 15-11-1993**

பரீட்சைத் திகதி பின்னர் அறிவிக்கப்படும்


அதிபர்

[6322]

உ

'ஓம் விராட் விஸ்வப் ப்ரஹ்மனேநம'

**முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி**



தோற்றம்: 15-04-1913 மறைவு: 19-10-1992

## சிங்களவர் துன்பத்திற்கு இரு கட்சிகளுமே காரணம்

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தைக்கு தயாராக இருந்தால் முதலில் ஆயுதத்தை கீழே வைக்க வேண்டும் நாடு பிரிவுபடுவதற்கு நாம் இடம் கொடுக்க மாட்டோம். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், கிறிஸ்தவ அமைப்புகள் விடுதலைப் புலிகளின்கீழ் வேலை செய்கின்றார்கள் இன்று சிங்கள இனம் முகம் கொடுத்துள்ள பிரச்சினைக்கு பெரும்பான்மைக் கட்சிகள் இரண்டுமே பதில்சொல்லியாக வேண்டும் என கொழும்பு மாவட்ட மக்கள் ஐக்கிய முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் 16 வருடமாக வடக்கு கிழக்கு பிரச்சினையால் நாம் பெரும் துன்பத்தை அனுபவிக்கின்றோம். இதற்கு இன்னும் தீர்வு காணப்படவில்லை நாட்டின் கடலின் மூன்றில் இரண்டுபங்கும், நிலத்தின் மூன்றில் ஒரு பங்கும் இன்று விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது என்றும் அவர் கூறினார்.

## ராணுவம் மீட்கும் பகுதியில் குடியேற்றம் அவசியம்

### - காமினி ஜெயசூரியா தெரிவிப்பு

விடுதலைப்புலிகளின் ஆட்சி நிலவும் வடக்கு - கிழக்கு பகுதிகளை இராணுவ நடவடிக்கை மூலம் மீட்டால் மட்டும் போதாது. அங்கு இராணுவத்தினரின் குடும்பங்களை குடியமர்த்துவதன் மூலமே மீண்டும் புலிகள் அப்பகுதியில் செயற்படாது தடுக்கமுடியும் என சிங்கள பாதுகாப்பு மற்றும் மாபோதி சங்கத் தலைவர் காமினி ஜெயசூரியா தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், ''இன்று எமதுநாடு பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ளது. இந்நாட்டை பிரித்துத்தருமாறு கோரி புலிகள் போராட்டம் நடத்துகின்றனர். பௌத்த சமயத்தை அழிக்கும் நோக்கத்துடன் அவர்கள் பல சமயங்களை சேர்ந்தவர்களை கவர்ந்து செயற்பட்டு வருகின்றனர். ஒருபக்கம் சிங்கள நாட்டிற்கும் மறுபக்கம் பௌத்தத்திற்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பல பகுதிகளை அர்ப்பணிப்புகளின் மத்தியில் எமக்கு கிடைக்கச் செய்தனர். அதனை பாதுகாக்க முடியாது என கூறி அரசியல்வாதிகள் மீண்டும் விட்டுவிடுகின்றனர். யாழ்ப்பாணம் கோட்டை, கிளாலி ஆகியவற்றை எமது இராணுவத்தினர் அளப்பரிய தியாகத்தினால் மீட்டுத்தந்தனர் இன்று அவை எம்மிடம் இல்லை. அங்கு மீண்டும் புலிகள் குடியேறிவிட்டனர். அங்கிருந்து அவர்கள் எமது சிங்கள இளைஞர்கள் மீது தாக்குதல் நடத்துகின்றனர். என்றார்,

## நினைவு கூருகின்றோம்... 1993-10-19

1987ஆம் ஆண்டு இதேதினத்தில் முல்லைத்தீவு - முள்ளியவளைப் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**பாஸ்கரன்** (மார்கண்டு இலங்கேஸ்வரன் - நடுப்பிரப்பந்திடல், தம்பலகமம் - திருமலை)

யாழ் - கோட்டைப் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**சசி** (பொன்னுச்சாமி பாலசிங்கம் - கரணவாய்தெற்கு, கரவெட்டி - யாழ்)

இதே ஆண்டு வீரச்சாவெய்திய-

★ **சின்னையா மகேந்திரன்** (கதிரவெளி, வாகரை- மட்டு)

யாழ் - கொட்டடி, ஆனைக்கோட்டை, கொக்குவில் இராசபாதை, உரும்பராய், கோப்பாய், வசாவிளான் ஆகிய பகுதிகளில் இந்தியப்படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளின் போது படுகொலை செய்யப்பட்ட கொட்டடியைச் சேர்ந்த தம்பதிகள் இவர்களது 7 வயது மகன், உரும்பராயைச் சேர்ந்த ஒரே குடும்பத்தில் மூவர் மற்றும் ஒரு மாணவி உட்பட 24 தமிழர்கள்.

1990ஆம் ஆண்டு பலாலி முகாமைச் சூழ்ந்த பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட ஒப்ப

தனத்தினை பெருக்கும் நோக்கத்தினைக் கொண்டு கொடிகாமம் பனை, தென்னை, வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கத்தினர் தமது பராமரிப்பில் பனம் விதைகளை நாட்டி வருகின்றனர்.

முதல் நடவடிக்கையாக அல்லாரை வெள்ளாம் போக்கட்டிப் பகுதிகளில் கடந்த சனியன்றுபனம் விதை நாட்டல் வைபவம் ஒன்று சங்கத்தின் தலைவர் பெ. சுப்பிரமணியம் அவர்களின் தலைமையில் இடம் பெற்றது. [86]

## கொலரா பாதிப்பு

[தென்மராட்சி]

கெற்பலி பண்டிதர் குடியிருப்பு அகதிமுகாமில் வயிற்றோட்ட நோயினால் ஒருவர் பாதிக்கப்பட்ட நிலையில் அண்மையில் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். வயிற்றோட்டநோய் ஏற்பட்டஇவருக்கு 'கொலரா' நோயாகஇருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது. வயிற்றோட்ட நோய் அகதிமுகாமில் பரவக் கூடிய சாத்தியக் கூறுகள் தெரிகின்றன. (86)

## மணவர்களுக்கு உதவி

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறை சென்மேரிஸ் சனசமூகநிலையத்தினர் வறிய மாணவர்கள் தமது கல்வியைத் தொடர்வதற்கு வசதியாக இரவு நேரத்தில்வெளிச்ச வசதியை செய்து கொடுத்துள்ளனர். இம் மாதம் முதலாம் திகதி முதல் நடத்தப்பட்டுவரும் இச் சேவையில் பயன்படும் பெற்றோமக்ஸ் வசதியை தமிழீழ விடுதலைப் புலிகள் மாணவ அமைப்பினர் செய்து கொடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது. இச்சேவை மூலம் சுமார் இருநூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் பயன் பெற்று வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பரிசளிப்பு விழா

(மானிப்பாய்)

யாழ் ஆனைக்கோட்டை அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை பரிசளிப்பு விழா இன்று பகல் 1-30 மணியளவில் பாடசாலை அதிபர் திரு சி. நாகையா அவர்கள் தலைமையில் நடைபெற உள்ளது பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் அவர்கள் கலந்து கொள்ள இருக்கின்றார் சிறப்பு விருந்தினராக பிரதிக் கல்விப் பணிப்பாளர் க. இரட்ணராசா, உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. ஐ. மனோகரன் கலந்து கொள்கின்றனர். (07)

கின்றது.

''குமாரி'' கப்பலின் வருகை தாமதமாகுவதனால் அக்கப்பலிற்கு பதிவு செய்தவர்கள் மற்றும் ஏற்கனவே 'நரோமா' ழமைகளாக ''நரோமா'' கப்பலின் பயணிகள்சேவை இடை நிறுத்தப்பட்டமையே காரணம் என தெரிவிக்கப்பட்டது. (பா)

## இன்று மாலையில்தான் வாதுவ கப்பல் வந்து சேருமாம்

(யாழ்ப்பாணம்)

கொழும்புத் துறைமுகத்தில் இருந்து புறப்பட்ட ''வாதுவ'' கப்பல் இன்று மாலையே காங்கேசன்துறைக்கு வந்து சேருமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இக்கப்பலில் யாழ். பிரதான தபாலகத்திற்கான சுமார் 611 தபால் பொதிகள் எடுத்து வரப்படுவதாக யாழ். பிரதான தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை யாழ். பிரதான தபாலகத்தினால் கொழும்பு தபாலகத்திற்கு ''குமாரி'' கப்பலில் அனுப்பி வைக்கப்பட்ட தபால் பொதிகள் காங்கேசன்துறைமுகத்தில் தவம் கிடப்பதாக தெரியவருகின்றது. (பா), (நி)

## அரச அலுவலகங்களை அம்பாறைக்கு மாற்ற முயற்சி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரில் இயங்கும் உள்நாட்டு இறைவரி திணைக்கள அலுவலகத்தை அம்பாறை நகருக்கு மாற்ற திரை மறைவில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

உள்நாட்டு இறைவரி தலைமையகத்திலிருந்து அம்பாறை மாவட்டத்துக்குரிய கோவைகளின் விபரங்களைக் கேட்டு அவசரச் செய்தியொன்று அனுப்பப்பட்டிருப்பதுடன் அம்பாறையில் முதல் கட்டமாக உப அலுவலகமொன்றை ஏற்படுத்தி பின்னர் முழு அலுவலகத்தையுமே மாற்றத் தீர்மானிக்கப்பட்டு இருப்பதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை மட்டக்களப்பு பிராந்திய உள்ளூராட்சித் திணைக்களத்தின் கீழ் முன்னர் அம்பாறை, மட்டக்களப்பு, பொலநறுவை ஆகிய மாவட்டங்கள் இருந்தன. மாகாண சபை ஆட்சிமுறை அமுலுக்கு வந்ததைத் தொடர்ந்து பொலநறுவை மாவட்டம் அனுராதபுரத்தின் கீழ் கொண்டு வரப்பட்டபோது அநுராதபுரத்தின் கீழ்நிர்வகிக்கப்பட்டு வந்த திருக்கோணமலை மாவட்டப்பணிகள் மட்டக்களப்பு அலுவலகத்தின் கீழ் கொண்டுவரப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் திருமலை மாவட்ட வேலைகள் இன்னும் மட்டக்களப்பு அலுவலகத்தின் கீழ் கொண்டுவரப்படாத அதே சமயம் அம்பாறை மாவட்டப் பணிகளைப் பிரிக்கவும் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

ஏற்கனவே மட்டக்களப்பில் இயங்கிய நீர் வழங்கல் வடிகால் சபை, நெல் சந்தைப் படுத்தும் சபை ஆகியவற்றின் பிராந்திய அலுவலகங்களும் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற கிழக்கு மாகாண அலுவலகமும் அம்பாறைக்கு இடம் மாற்றப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## உணவுப்பொருள்கள் இறக்குவது காங்கேசனில் மந்தகதியில்

(நமது நிருபர்)

தீவுப் பகுதிகளுக்கான உணவுப் பொருள்களை நத்தை வேகத்தில் ''குமாரி'' கப்பல் காங்கேசன்துறை துறைமுகத்தில் இறக்கிக் கொண்டிருப்பதாக யாழ் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இக்கப்பலில் இருந்து நாளொன்றிற்கு சுமார் 25 மெற்றிக் தொன் உணவுப் பொருள்களே இறக்கப்படுவதாகத் தெரிய வருகின்றது


இதனால் ''குமாரி'' கப்பல் பருத்தித்துறை வருவது மேலும் தாமதமாகுவதாக யாழ் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. மேலும் குமாரி கப்பலில் திருக்கோணமலை வரை செல்ல பதிவு செய்திருந்த அரச ஊழியர்கள் அக்கப்பலின் வருகையை எண்ணி தவம் கிடக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

[பா], (நி)

## மாதாந்த சொற்பொழிவு

யாழ். றோட்டரக்ட் கழகத்தால்நடாத்தப்படும் மாதாந்த சொற்பொழிவு எதிர்வரும் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் முன்னாள் யாழ். இந்துக் கல்லூரி அதிபர் திரு. குகதாசன் அவர்கள் ''பிறப்புரிமை பொறியியல்'' எனும் விடயம் பற்றி உரையாற்றுவார்.

## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம்: **15-04-1913**

மறைவு: **19-10-1992**

உயர்திரு:

சண்முக பத்தர் நாராயணசுவாமி

எங்கள் அன்புத் தெய்வமே, நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டு சென்றாலும் நீங்காத உங்கள் நினைவுடன்...

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்—

தங்கள் மைத்துனர்
சந்திரசேகரம் கமலா குடும்பத்தினர்
மகள், மருமகன்
ஜெயமோகன் பவானி குடும்பத்தினர்
(நீர்கொழும்பு)

நீராவியடி,
யாழ்ப்பாணம். (6314)

## 41-ம் நாள் நினைவஞ்சலி

(19-10-93)



தாயின் மடியில்:
**14.2.1969**

தாயக மண்ணில்:
**9.09.1993**

**லெப். சிவம் (சின்னையா கமலேஸ்வரன்)**

(வளலாய்)

சிங்களன் கொடுமை கண்டு
சீறிய புலியே! புயலாய்
செங்களம் குருதி சிந்தி
சென்றனை வளலாய் ஈந்த
எங்களின் உள விளக்கே
என்றும் நீ அணைவதுண்டோ?
தங்க நின் முகத்தை விண்ணில்
தாரகை பூத்து நிற்கும்.
எப்போதும் உன் பாதச் சுவட்டில்
இணைவோம் நாம் உறுதியுடன்.

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி. (6309)

அம்மா, சகோதரர்கள்,
உறவினர்கள்.

## 1993-10-19

1987ஆம் ஆண்டு இதேதினத்தில் முல்லைத்தீவு - முள்ளியவளைப் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**பாஸ்கரன்** (மார்கண்டு இலங்கேஸ்வரன் - நடுப்பிரப்பந்திடல், தம்பலகமம் - திருமலை)

யாழ் - கோட்டைப் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**சசி** (பொன்னுச்சாமி பாலசிங்கம் - கரணவாய்தெற்கு, கரவெட்டி - யாழ்)

இதே ஆண்டு வீரச்சாவெய்திய-

★ **சின்னையா மகேந்திரன்** (கதிரவெளி, வாகரை- மட்டு)

யாழ் - கொட்டடி, ஆனைக்கோட்டை, கொக்குவில் இராசபாதை, உரும்பராய், கோப்பாய், வசாவிளான் ஆகிய பகுதிகளில் இந்தியப்படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளின் போது படுகொலை செய்யப்பட்ட கொட்டடியைச் சேர்ந்த தம்பதிகள் இவர்களது 7 வயது மகன், உரும்பராயைச் சேர்ந்த ஒரே குடும்பத்தில் மூவர் மற்றும் ஒரு மாணவி உட்பட 24 தமிழர்கள்.

1990ஆம் ஆண்டு பலாலி முகாமைச் சூழ்ந்த பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட ஒப்பரேசன் ஜெயசக்தியின் 3-ம் நாள் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய-

**கப்டன் குட்டி/அலெக்ஸ்** (அம்மைப்பிள்ளை கிருஷ்ணராஜா - கிருஷ்ணராஜா வீதி - பருத்தித்துறை)

**லெப் பேணாட்** (அல்பிரட் கலியுகக்கண்ணன்- நாகர்கோவில் - வடமராட்சிகிழக்கு - யாழ்)

**2-ம் லெப். சீனன்** (சற்குரு சதீஸ் - சதீஸ்வீதி, நீர்வேலி வடக்கு - யாழ்)

**அனுசன்** (கிருஷ்ணன் தங்கவேலு - குரும்பசிட்டி, தெல்லிப்பழை - யாழ்)

**சின்னமணி** (ஏகாம்பரம் ஜெயந்தன் - செல்வபுரம், உரும்பராய் தெற்கு - யாழ்)

**அமுதன்** (சுதிரவேலு துரைராசா - அன்னங்கை, உரும்பராய் தெற்கு - யாழ்)

இதே நடவடிக்கையின் போது கட்டுவன் பகுதியில் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய-

**ஆர்த்தி** [கோமதி தம்பாப்பிள்ளை - எல்லைவீதி, ஆரையம்பதி - மட்டு]

**மூவின்** [இராசரத்தினம் மோகானந்தன்- சித்திரமேழி இளவாலை - யாழ்]

இதே நடவடிக்கையின் போது வசாவிளான் பகுதியில் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய-

**மேஜர் அன்ரனி** [கனகசூரியம் சிறிதரன் - அம்மன்கோவிலடி, கல்முனை - அம்பாறை]

**2-ம் லெப். சுகந்தன்** [இராசரட்ணம் சிவனேந்திரராசா - கள்ளப்பாடு-முல்லைத்தீவு]

இதே நடவடிக்கையின் போது காங்கேசன்துறைப் பகுதியில் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய-

**பற்றீசியா** [தெய்வமொழி குணம் - முள்ளியவளை- மணலாறு]

**2-ம் லெப். ரதீஸ்/சதீஸ்** [வேலும்மயிலும் குணசீலன்- நெடியகாடு - வல்வெட்டித்துறை]

**சேந்தன்/அப்பன்** [நாகமுத்து யோகராசா - புன்னாலைக் கட்டுவன் தெற்கு, சுன்னாகம் - யாழ்]

மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய-

**அகஸ்ரின்** [திரவியம் சிவகுமார் - கருவேலன்கண்டல் - ஒட்டிசுட்டான்]

யாழ் மாவட்டத்தில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட விபத்தில் வீரச்சாவெய்திய-

**பாலு** [அருளம்பலம் ரவிச்சந்திரன் - கருநாட்டுக்கேணி- மணலாறு]

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

★ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/7729)

# 3-ம் ஆண்டு நினைவஞ்சலி




தோற்றம்:

24 - 09 - 1964

வீரச்சாவு:

19 - 10 - 1990



09 - 1964 | 10 - 1990

# முன்னாள் அம்பாறை மாவட்டத் தளபதி மேஜர் அன்ரனி

கனகசூரியம் சிறிதரன் (அம்மன் கோவிலடி கல்முனை)

## பூவுள்ளம்கொண்ட பூகம்பமிவன்

அடிமுடியிடையெங்குமதிரடி
அன்ரனி செயல் சொல்லும் கரந்தடி
சிங்களப்படைமீதும் இந்தியப்படைமீதும்
இடிவிழநிகரடி; இன்னும் மரபிலேநேரடி
அடிவருடியைநொடிகண்ட மாவட்டத்தளபதி
உடலைப் போல் உள்ளமும் வெளிப்படி
தலைவனின் வழியிலே படிப்படி

தொங்கலாய் மக்களின் மனப்பிடி
றம்போவைத் தூக்கினால்படையணி
போர்க்கலை தேர்ந்தகை அடிதடி
அதிரடிப்படைக்கில்லை அன்ரனி
வசாவிளான் வீழ்த்துமா உருப்படி
பூமுனை பூக்காதா புலிக்கொடி
வரலாறே பக்கங்களை எழுதிமுடி

-கிங்ஸ்லி-

வசாவிளானில் சிறிலங்கா ராணுவத்தின் 'ஒப்ரேசன் ஜயசக்தி' நடவடிக்கையின் மூன்றாம் நாள் எதிர்கொண்ட நேரடிச்சமரில் வீரச்சாவெய்தினார்.

கி-7780

# இயற்கையுடன் இணைந்த பயிர்ப்பாதுகாப்பு

ச. பொன்னுத்துரை
விவசாய ஆராய்ச்சிப் பொறுப்பதிகாரி
விவசாய ஆராய்ச்சி நிலையம், திருநெல்வேலி

கடந்த மூன்று, நான்கு தசாப்தங்களாக கமரசாயனங்களின் பாவனை அதிகரித்துள்ளதை யாவருமறிவர். குறிப்பாக பீடை நாசினிகள் சில சந்தர்ப்பங்களில் புத்தி சாதுரிய மற்ற முறையில் அல்லது கட்டுப்பாடுகளின்றி உபயோகிக்கப்படுவதனால் மனிதனுக்கும் பிற உயிர்களுக்கும் காலப்போக்கில் பலதீய விளைவுகளை ஏற்படுத்துகின்றன. இப்பீடை நாசினிகளின் பாவனையைத் தவிர்த்து மாற்று வழிகளில் விவசாய உற்பத்தியை மேற்கொள்வது சிறந்தது பீடைநாசினிகளின் பாவனையை மட்டுப்படுத்திக் கொள்வதனால் சுற்றாடல் மாசடைவதை இயன்றளவு தடுப்பதுடன் எதிர்காலச் சந்ததியினர் தேகாரோக்கியத்துடன் வாழவும் உதவுகின்றது.

## பீடைகள் தடுப்பு முறைகள்

விவசாய முயற்சியில் செயற்கை இரசாயனங்களைக் கொண்டு பயிர்ப்பீடைகளைக் கட்டுப்படுத்தாமல் வேறு வழிகளில் பயிர்ப்பாதுகாப்பினை மேற்கொள்ளலாம். ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முகாமைத்துவத்திற்கமைய பீடைகளைக் கட்டுப்படுத்துவது சிறந்தது பல்வேறு பீடைக் கட்டுப்பாட்டு முறைகளை ஒன்று சேர்த்து உருவாக்கப்பட்ட திட்டமே ஒருங்கிணைந்த பீடைக்கட்டுப்பாடு அல்லது பயிர்ப் பாதுகாப்பு முகாமைத்துவமாகும்.

உயிரியல் ரீதியாக பீடையின் தன்மையை அறிந்து பயிர்களில் அவைகள் தங்கியிருந்து வாழ்வதைக் குறைப்பதற்கு அல்லது தடுப்பதற்கு முயல வேண்டும். பீடைகளில் இயற்கையாகத் தோன்றும் எதிரிகளின் எண்ணிக்கையையும் பரம்பலையும் ஊக்குவிப்பதனால் குறிப்பிடத்தக்க கட்டுப்பாடு உண்டாவதை அவதானிக்கலாம்.

பயிர்ப் பாதுகாப்பினை உரிய முறையில் அணுகுவதனால் இலகுவாக்கிக் கொள்ளலாம், இதனை விளங்கிக் கொள்வதற்கு மேற்கொள்ளப்படும் பிரதான விவசாய முறை சுற்றாடலுடன் எவ்வாறு இணைந்துள்ளது என்பதைக் கருத்திற்கொள்ள வேண்டும். குறிப்பிட்ட ஒருமுறையிற்தான் பயிர்ப்பாதுகாப்பு மேற்கொள்ள வேண்டுமென்றில்லாது பொருத்தமான பல முறைகளை அப் பகுதிக்கும் காலநிலைக்கும் பயிருக்குமேற்...

3. இரண்டாந்தரப் பீடைகளின் பெருக்கத்தினால் உண்டாகும் பாதிப்பு குறைகின்றது.
4. மனிதனினதும் பண்ணை விலங்குகளினதும் சுகாதாரத்திற்குக் குறைந்தளவு தீமையே ஏற்படுகின்றது.
5. சுற்றாடலுக்கும் நீர் நிலைகளுக்கும் பாதிப்பை ஏற்படுத்துவதில்லை.
6. விவசாயிகள் கமரசாயனங்கள் கிடைப்பதில் தொடர்ச்சியாகத் தங்கியிருக்க வேண்டியதில்லை
7. பீடைக் கட்டுப்பாட்டிற்கு ஏற்படும் செலவு குறைகின்றது.

தாவரங்களிலிருந்து பெறப்படும் பீடைநாசினிச் சேர்வைகளை உபயோகித்து செயற்கைப்பீடைநாசினிகளின் பாவனையால் ஏற்படும் தீயவிளைவுகளைத் தவிர்த்துக் கொள்ளலாம். வேம்பிலிருந்து கிடைக்கப் பெறும் விதை, எண்ணெய், பிண்ணாக்கு போன்றவைகளைப் பீடை நாசினிகளாகப் பயன்படுத்தி நூற்றுக்குமதிகமான பயிர்ப் பீடைகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக ஆராய்ச்சிகள் மூலம் அறியப்படுகிறது.

## பயிர் செய்யுமிடமும் சுற்றாடலும்

பயிர் செய்யும் பிரதேசத்திற்கும், சுற்றாடலுக்குமேற்ற தடுப்பு முறைப் பயிர்ப் பாதுகாப்பு முறைகளைத் தேவைக்கேற்ப விவசாயிகள் மேற்கொள்வது சிறந்தது. விவசாயிகளும், விவசாய ஆலோசனை வழங்குவோரும் குறிப்பாக பின்வரும் விடயங்களை அனுசரித்தல் வேண்டும்.

1. விவசாயம் செய்யுமிடங்களிலும் அதனை அண்டியிள்ள பிரதேசத்திலும் காணப்படும் பீடை இனங்கள் மற்றும் நன்மை பயக்கும் பூச்சிகள் பற்றிய தகவல்கள்.
2. பீடைகளினதும், நன்மை பயக்கும் பூச்சிகளினதும் உயிரியல் ரீதியான தகவல்கள் குறிப்பாக உருவவியல், வாழ்க்கைச் சக்கரம், இனவிருத்தி முறை, உணவு உட்கொள்ளும் வழக்கம் என்பன.
3. வெவ்வேறு பயிர்ச் செய்...

யாகவே தடுப்பு முறைப் பயிர் பாதுகாப்பை மேற்கொள்ளப் பெரிதும் உதவுகிறது.

பீடைகளில் இயற்கையான எதிரிகளுக்கு கூடுதல் உணவளிக்க வல்ல பயிர்வகைகள் தேன், மகரந்தம் என்பன கிடைக்க உதவுவதுடன் கவர்ந்துண்ணும் பிற பூச்சிகள், ஒட்டுண்ணிகள் என்பன வேண்டியளவில் நிரந்தரமாக நிலவுவதற்கும் வழி செய்கிறது.

குறிப்பிட்ட இடத்தில் இருந்து வழங்கிகளும் பிற தாவரங்களும் ஒருங்கே காணப்படுவதும் பயிர்களின் உடனடிச் சுற்றாடலில் நிலவும் காலநிலை பீடைகளின் நடமாட்டத்தில் செல்வாக்கை உண்டு பண்ணுகின்றன. கலப்பு விவசாயம் பலதரப்பட்ட கவர்ச்சியை ஏற்படுத்துகிறது. இதனால் பீடைகள் கலக்கமான நிலையடைந்து தங்களுக்கு உணவளிக்கும் தாவரங்களைச் சென்றடைய முடியாமலிருக்கிறது. சில தாவரங்களின் வெறுப்பூட்டும் தன்மையினால் பீடைகளின் எண்ணிக்கை குறைவதற்கு வாய்ப்பளிக்கிறது.

அனுபவரீதியாக தக்காளியுடன் கோவாவைப் பயிர் செய்வதனால் கோவாவைத் தாக்கும் டயமன்முதுகு அந்துப்பூச்சி குறைவது இதற்கோர் நல்ல உதாரணமாக விளங்குகிறது. அத்துடன் தக்காளிப்பழப் புழுவும் கட்டுப்படுத்தப்படுகிறது இதில் இவை ஒன்றுக்கொன்று உதவுகின்றன.

சோளம், கவ்பீ இரண்டையும் ஒருங்கே பயிரிடும்பொழுது தண்டு துளைப்பான்களின் தாக்கம் கணிசமாகக் குறைகிறது.

சில வேளைகளில் கலப்புப் பயிர்ச்செய்கை எதிர்பார்ப்பதற்கு மாறாக பீடைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் செய்கிறது. ஆனால் கூடிய விரைவில் சமநிலை அடைந்து விடும்.

## பயிர்செய்யுமிடத்தின் தன்மை

பயிர்ச் செய்கைக் கொவ்வாத இடங்கள் அண்மையில் ...

முழுப்பயனையும் பெறுவதற்கு அடுத்து செய்கை பண்ணப்படும் பயிர்கள் வெவ்வேறு குடும்பங்களைச் சேர்ந்தவைகளாக இருத்தல் வேண்டும். மண்ணில் தோன்றும் பீடைகளான விலாங்குப்புழு, நாற்புழு, வெட்டுப்புழு போன்றவைகளைச் சுழற்சி முறைப் பயிர்ச்செய்கை மூலம் திறம்படக் கட்டுப்படுத்த முடிகிறது.

இது தொடர்பாக கிழங்குப் பயிர்களான வற்றாளை, கரட், மரவள்ளியினைத் தொடர்ந்து இலை உணவுப் பயிர்கள் அல்லது பழப்பயிர்கள் (கோவா, தக்காளி பிற) பின்னர் தானியப் பயிர்களான சோளம், பாசிப்பயறு, கவ்பீ என்பன பயிர்செய்வது சுழற்சி முறைக்கு ஒரு நல்ல உதாரணமாகும்.

## பீடைப் பெருக்கமும் பயிர் செய்கைக் காலமும்

தகுந்த நடுகைக்காலத்தைத் தெரிவு செய்வதனால் பீடைப் பெருக்கத்தைக் குறைந்தளவில் வைத்திருக்கலாம் விருந்து வழங்கிகளின் குறிப்பிட்ட பருவத்தில் பீடைகள் பெருகி சேதமேற்படுத்துவதை அறியக் கூடியதாயிருக்கிறது. இலைதவில் தாக்குதலுக்கு இலக்காகும் பருவத்தில் பீடைகள் பெருகுவதைத் தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

பீடைகளின் வாழ்க்கை வட்டம் பயிரில் உண்டாகும் தாக்கம்பற்றிய தகுந்த அறிவு, இருக்குமானால் ஒரு விவசாயி கட்டுப்பாடு சம்பந்தமாக சரியான முடிவை எடுப்பதற்குப் பெரிதும் உதவும். பீடைகள் தோன்றுவதும் பயிரில் ஏற்படுத்தும் தாக்கங்கள் குறித்தும் திட்டமிட்டுக் கூறுவது கடினம். பயிருக்கும் பீடைகளுக்கும் உள்ள தொடர்பை அவ்வப்பொழுது கூர்ந்து அவதானிக்குமிடத்து தாக்கமுண்டாவதை விலக்கிக்கொள்ள பெரிதும் உதவுகிறது.

சக்காளியை நாட்டி ஊடு பயிராகக் கோவாவை நடுவதனால் பிந்தியதில் ஏற்படுகின்ற டயமன் முதுகு அந்தின் (அழிவை ஏற்படுத்துவது புழு) தாக்கத்தைக் கட்டுப்படுத்த முடிகிறது. சோளத்துடன் போஞ்சி செய்கை பண்ணப்படும் பொழுது போஞ்சியில் உண்டாகும் பீடைகளின் தாக்கம் தனிய போஞ்சி செய்யப்படும் பொழுது ஏற்படும் தாக்...

றது. அதிக உரமிடப்பட்ட பயிர்கள் பீடைகளை மிகவும் கவருகின்றன. அதிக நைதரசன் இடப்பட்ட பயிரில் அழுக்கணவன் மிகவும் அதிகரிப்பது இதற்கு நல்ல உதாரணம். அதிக நைதரசன் இடப்பட்ட பயிரில் சிற்றுண்ணிகள் நாளொன்றுக்கு 10 முட்டையும் இப்போஷாக்குக்குறைந்திருந்த பொழுது சராசரியாக 5.4 முட்டைகளே இடப்பட்டது எனவும் அறியப்படுகின்றது

தகுந்த போஷாக்கின்மையினால் பயிர்கள் இலகுவில் பீடைத் தாக்கத்துக்கு உள்ளாகின்றது. பீடைகளை எதிர்க்கும் சக்தி அதிகம் உண்டாகுவதற்கு சமச்சீராக போஷாக்கினை அளிப்பதும் மண்ணில் சேதனப் பொருள்கள் இருப்பதும் அவசியம்.

## உழவு செய்தல்

பீடைகள் மண்ணினுள் குடம்பிகள் அல்லது கூட்டுப் புழு நிலையில் காணப்படுகின்றன. இவைகள் பயிர் மீதிகளிலும் இருப்பதுண்டு உழவு செய்வதனால் இருமுறைகளில் இப் பீடைகள் அழிக்கப்படுகின்றன. ஆழமாக புதைக்கப்படுவதனால் முட்டை, குடம்பி, கூட்டுப்புழு யாவும் இறக்கின்றன. வெளியே கொண்டு வரப்படும் பொழுது காய்ந்து இறக்கின்றன அல்லது பறவைகளினாலும் வேறு பிராணிகளினாலும் உண்டு அழிக்கப்படுகின்றது.

உழுவு செய்வதனால் மண்ணில் உள்ள உக்கல் ஆழத்தில் போவதுடன் மண் அரிப்பும் ஏற்படுகின்றது என்ற கருத்தும் நிலவுகின்றது. பயிர் மீதிகளுடன் பண்படுத்தாத தரையில் பயறு, போஞ்சி என்பனவற்றை நாட்டிய பொழுது போஞ்சி ஈ, பனிப்பூச்சி, ஐசிட்ஸ் என்பவைகள் முளைத்து வரும் தாவரங்களைச் சென்றடைய முடிவதில்லை. தரை காய்ந்து இருக்கும் பொழுது உழவு செய்வதனால் குறவணவன் புழு தரையில் மேற்கொண்டு வரப்பட்டு சூரிய ஒளியினால் தாக்கப்படுகின்றது.

## பயிர் இனங்களைத் தெரிவு செய்தல்

பாரம் பரிய முறையில் பீடைகளை எதிர்த்து வளரும் பயிரினங்கள் இருந்து வந்தன. தற்கால முறையில் விளைவு ...

தைத் தொடரமுடிவதில்லை.

## சமூக நடவடிக்கைகள்

பரந்த தேசப்பரப்பில்பீடைத்தாக்கம் ஏற்படும் பொழுது பயிர்ப் பாதுகாப்பினைக் கூட்டுமுயற்சியாக மேற்கொள்வது சிறந்தது. வெட்டுக்கிளியின் தாக்கம் ஏற்படும் பொழுது அதனுடைய முட்டைகள் இருக்கும் இடங்களைத் தேடி அழிப்பதை சம்பந்தப்பட்ட விவசாயிகள் கூட்டுமுயற்சியாகச் செயற்படுவதனால் கணிசமான (70—80%) கட்டுப்பாடு ஏற்படுகிறது.

இக் கட்டுரையிலடங்கிய கருத்துக்கள் கபி ஸ்ரோல் என்பவரின் ''அயனமண்டல வலயத்தின் இயற்கை முறைப் பயிர்ப்பாதுகாப்பு (1988)'' என்னும் ஆங்கில நூலில் குறிப்பிட்டவைகளை ஆதாரமாகக் கொண்டுள்ளது. இக் கருத்துக்களில் சிலவற்றையேனும் விவசாயிகள் சூழலுக்கேற்ப நடைமுறையில் அனுசரிப்பது உற்பத்தியாளர்கள், நுகர்வோர் மற்றும் சுற்றாடல் பாதுகாப்போர்யாவருக்கும் நன்மை பயக்கும்.

---


## தீவகத்தில் கடும் வரட்சி

(யாழ்ப்பாணம்)

தீவகப் பகுதிகளில் தற்போது கடும் வரட்சி நிலவுவதாக தெரியவருகின்றது. இங்குள்ள வீதிகளில் புழுதி அதிகமாக இருப்பதாகவும் காற்றினால் அது வாரி இறைக்கப்படுவதாகவும் வரட்சியினால் குடிதண்ணீர்ப் பஞ்சம் அங்கு தலைவிரித்தாடுவதாகவும் அங்கிருந்து வந்துள்ளோர் மூலம் அறிய முடிகின்றது (22)

---

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
26-03-1968

மறைவு
12-10-1991

## தேவராசா செல்வராணி

ஆண்டு இரண்டு சென்றதம்மா - அந்த
அழகு முகம் சோர்ந்ததம்மா
மாலையுடனும் மஞ்சள் குங்குமத்துடனும்
நாம் மணக்கோலம் காண்போம் என இருக்க
பெற்றாரும் உற்றாரும் பேதலித்து இன்று
பேராறாய் பெருகுகிறதே கண்ணீரம்மா
பெற்றவயிறு பற்றியெரிய பிரிந்து விட்டாயே
பேசுங்கிளியே உன்னை இழந்து
துடிக்கிறோமம்மா.

கோண்டாவில் கிழக்கு.
(6317)

குடும்பத்தினர்,
உற்றார், உறவினர்,
நண்பர்கள்

## 31-ம் நாள் நினைவஞ்சலியும்

யிருந்து வாழ்வதைக் குறைப்பதற்கு அல்லது தடுப்பதற்கு முயல வேண்டும். பீடைகளில் இயற்கையாகத் தோன்றும் எதிரிகளின் எண்ணிக்கையையும் பரம்பலையும் ஊக்குவிப்பதனால் குறிப்பிடத்தக்க கட்டுப்பாடு உண்டாவதை அவதானிக்கலாம்.

பயிர்ப் பாதுகாப்பினை உரிய முறையில் அணுகுவதனால் இலகுவாக்கிக் கொள்ளலாம், இதனை விளங்கிக் கொள்வதற்கு மேற்கொள்ளப்படும் பிரதான விவசாய முறை சுற்றாடலுடன் எவ்வாறு இணைந்துள்ளது என்பதைக் கருத்திற்கொள்ள வேண்டும். குறிப்பிட்ட ஒருமுறையிற்தான் பயிர்ப்பாதுகாப்பு மேற்கொள்ள வேண்டுமென்றல்லாது பொருத்தமான பல முறைகளை அப் பகுதிக்கும் காலநிலைக்கும் பயிருக்குமேற்றவாறு அனுசரிக்கலாம். விவசாயி பயிர்ப் பாதுகாப்பை மேற்கொள்வதற்கு இக்காரணிகள் பற்றிய விளக்கமும் அறிவும் மிகவும் அவசியமாகும்.

உச்ச விளைவைப் பெறுவதை நோக்கமாகக் கொள்வதிலும் பார்க்க இவ் விவசாய முயற்சியினால் உண்டாகக் கூடிய விரும்பத்தகாத பக்க விளைவுகளைச் சீர் தூக்கிப் பார்க்குமிடத்து ஏனையஉயிர் வாழ்வனவற்றின் தொடர்பு, பொருளாதாரப் பிணைப்பு, மற்றும் இயற்கை வளங்கள் என்பனவற்றின் தாக்கத்தைக் கருத்திற்கொண்டு கணிசமான உற்பத்தியைப் பெற முயல்வது சாலச் சிறந்தது.

மனித வாழ்க்கைக்கு தேவையான உணவுற்பத்தியைப் பாதிக்கின்ற பீடைகளைக் கட்டுப்படுத்த வேண்டியது மிக முக்கியம்.

பீடைகளைக் கட்டுப்படுத்தப் பல வழிகள் உண்டு. அவைகளுள் இயற்கை முறைப் பாதுகாப்பும் ஒன்றாகும். செயற்கை முறைக்கட்டுப்பாட்டிற்கு மாற்றீடாக இயற்கை முறைக் கட்டுப்பாடு அமைவதை விட கட்டுப்பாட்டினை நிறைவுபடுத்துவதாகக் கொள்வது பொருத்தம். இயற்கை முறையானது இரசாயனப் பீடை நாசினிகளைப் போன்று குறுகிய காலத்தில் தக்க பலனை அளிக்கமாட்டாதெனினும் நீண்டகால அடிப்படையில் பலவழிகளில் நன்மை பயக்கவல்லது. அவையாவன:

1. செயற்கைப் பீடை நாசினிகள் பாவிக்கும்பொழுது பீடைகள் எதிர்ப்புச் சக்தியை மேற்கொள்வதனால் சில சமயங்களில் இச்செயற்கைப் பீடை நாசினிகள் தொழிற்படாது போகும் ஆபத்து ஏற்படுகின்றது.
2. பீடைகளின் இயற்கை எதிரிகளின் அழிவு குறைகின்றது.

# ச. பொன்னுத்துரை

விவசாய ஆராய்ச்சிப் பொறுப்பதிகாரி
விவசாய ஆராய்ச்சி நிலையம், திருநெல்வேலி

அனுசரித்தல் வேண்டும்.

1. விவசாயம் செய்யுமிடங்களிலும் அதனை அண்டியுள்ள பிரதேசத்திலும் காணப்படும் பீடை இனங்கள் மற்றும் நன்மை பயக்கும் பூச்சிகள் பற்றிய தகவல்கள்.
2. பீடைகளினதும், நன்மை பயக்கும் பூச்சிகளினதும் உயிரியல் ரீதியான தகவல்கள் குறிப்பாக உருவவியல், வாழ்க்கைச் சக்கரம், இனவிருத்தி முறை, உணவு உட்கொள்ளும் வழக்கம் என்பன.
3. வெவ்வேறு பயிர்ச் செய்கைப் போகங்களில் காணப்படும் பூச்சிகளின் எண்ணிக்கை அல்லது பரம்பல் எவ்வாறு சுற்றாடலில் தங்கியிருக்கிறது.
4. பீடைகளின் வாழ்க்கை வட்டத்தில் இலகுவில் கட்டுப்படுத்தக் கூடிய பருவமும் அதற்கேற்ற கட்டுப்பாட்டுமுறையும்.
5. பீடைகளினால் மிகவும் தாக்கம் ஏற்படும் பயிரின் வளர்ச்சிப் பருவமும் காலமும்.
6. குறிப்பிட்ட பீடையினை கவரும் மாற்று விருந்து வழங்கி தாவரம் (பயிர் வகைகளும் ஏனைய இயற்கைச் சூழலில் வாழ்கின்ற பயிர்களடங்கலாக)
7. பீடைகளைக் கவர்ந்துண்ணும் பிறபூச்சிகளி (இரை கௌவிகள்) னதும், ஒட்டுண்ணிகளினதும் எண்ணிக்கையை அதிகரிக்க உதவுதல்.

மேற் கூறியவைகளை உன்னிப்பாக் அவதானித்து அவைகளின் நெருங்கிய தொடர்புகள் அல்லது ஈடுபாடுகள் சம்பந்தமான முக்கிய அறிவைப் பெறுவதன் மூலம் அங்கு நிலவும் சூழலுக்கேற்ப தீர்மானங்கள் மேற்கொள்ளவோ நடவடிக்கை எடுக்கவோ பெரிதும் உதவுகிறது.

## கலப்பு விவசாயமும பல்வகைப் பயிர்ச்செய்கையும்

பாரம்பரிய விவசாயமுறைகளில் பல்வகைப்பட்ட பயிர்கள் உற்பத்தி செய்வதை அவதானிக்கலாம். இயற்கைச் சூழலில் வாழ்கின்ற பயிர்கள் உட்பட பல்வேறு பயிர்வகைகள் ஒன்றன் பக்கத்தில் ஒன்றாக செய்கை பண்ணப்படுவது வேற்றுமைகளைப் புகுத்த உதவுகிறது. வெவ்வேறு பயிர் வகைகளை ஒரே சமயத்தில் உற்பத்தி செய்யும் கலப்பு முறை விவசாயம் இயற்கை தாக்கம் கணிசமாகக் குறைகிறது.

சில வேளைகளில் கலப்புப் பயிர்ச்செய்கை எதிர்பார்ப்பதற்கு மாறாக பீடைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் செய்கிறது. ஆனால் கூடிய விரைவில் சமநிலை அடைந்து விடும்.

## பயிர்செய்யுமிடத்தின் தன்மை

பயிர்ச் செய்கைக் கொவ்வாத இடங்கள் அண்மையில் இருக்குமிடத்து ஆங்காங்கே பல்லாண்டுத் தாவரங்கள், சதுப்பு நிலங்கள், புதர்கள், (பற்றைகள்) காணப்படும் பொழுது பறவைகள், ஊர்வன, பூச்சிகள் போன்றவை அங்கு வாழ்வதனால் பீடைகளை உணவாக உட்கொண்டு அழிப்பதற்கோ அன்றி அவைகளின் எணணிக்கையைக் கட்டுப்படுத்தவோ உதவுகிறது. இப்படியான சுற்றாடலில் பீடைகளை உண்டு அழிக்கும் பூச்சிகளும் இருப்பதுண்டு. இங்கு காணப்படும் பல்வேறு பிராணிகள்பயிர்ப்பீடைகளை உண்டு அழிப்பதனால் பீடைகளின் எண்ணிக்கை குறைவதற்கேதுவாகிறது. பல்லாண்டுத் தாவரங்களுடன் கூடிய புதர்கள், மரங்கள் காணப்படும்பொழுது பீடைகளை உண்டு அழிக்கும் பிராணிகள் செறிந்து காணப்படுவதுடன் அவைகளின் தொழிற்பாடு திறம்படச் செய்யப்படுவதையும் அவதானிக்க முடிகிறது. நிரந்தரமாகக் காணப்படும் தாவரங்களில் மனிதனின் ஈடுபாடு குறைவாக உள்ளதனால் நன்மை பயக்கும் பிராணிகளின் இனவிருத்திக்கு இடையூறு ஏதும் ஏற்படுவதில்லை.

## சுழற்சி முறைப் பயிர்ச்செய்கை

சுழற்சி முறைப் பயிர்ச் செய்கை குறிப்பிட்ட பீடையினை விருந்து வழங்கிகளான பயிர்களிலிருந்து காலத்தினாலும், இடத்தினாலும் பிரித்து வைப்பதற்குப் பேருதவி புரிகிறது. விருந்து வழங்கி அல்லாத ஒரு பயிரை உற்பத்தி செய்வதனால் பீடையின் வாழ்க்கை வட்டம் தடைப்பட்டுதொடர்ந்து மேற்கொள்ளும் பயிர்ச்செய்கையில் பீடை பெருகாதிருக்க வாய்ப்புண்டு.

பொதுப் பீடைகளின் எண்ணிக்கை குறைவாக இருப்பதற்கேற்றவாறு தொடர்ந்து செய்யும் பயிர்களைத் தேர்ந்தெடுப்பது அவசியம். இதன் கட்டுப்பாடு சம்பந்தமாக சரியான முடிவை எடுப்பதற்குப் பெரிதும் உதவும். பீடைகள் தோன்றுவதும் பயிரில் ஏற்படுத்தும் தாக்கங்கள் குறித்தும் திட்டமிட்டுக் கூறுவது கடினம். பயிருக்கும் பீடைகளுக்கும் உள்ள தொடர்பை அவ்வப்பொழுது கூர்ந்து அவதானிக்குமிடத்து தாக்கமுண்டாவதை விலக்கிக்கொள்ள பெரிதும் உதவுகிறது.

சக்காளியை நாட்டி ஊடு பயிராகக் கோவாவை நடுவதனால் பிந்தியதில் ஏற்படுகின்ற டயமண் முதுகு அந்தின் (அழிவை ஏற்படுத்துவது புழு) தாக்கத்தைக் கட்டுப்படுத்த முடிகிறது. சோளத்துடன் போஞ்சி செய்கை பண்ணப்படும் பொழுது போஞ்சியில் உண்டாகும் பீடைகளின் தாக்கம் தனிய போஞ்சி செய்யப்படும் பொழுது ஏற்படும் தாக்கத்தைக் காட்டிலும் கணிசமாக (சுமார் 66%)க் குறைகிறதென்று அறியப்படுகிறது.

பாரம்பரியமாக மழை காலத்தில் மட்டும் நெற்செய்கை மேற்கொள்ளப்படும் பொழுது தண்டுகோதி அந்துப் பூச்சியின் வாழ்க்கை வட்டம் முற்றுப் பெறாமல் இடைநிறுத்தப்படுகிறது. பிரதான மழைப் போகத்தில் சோளச் செய்கை மேற்கொள்ளும்போது தண்டு கோதியின் தாக்கம் ஏற்படாதிருக்கிறதென்றும் பின்னர் குறைந்த மழைப் போகச் செய்கையில் இப்பீடை பெருமளவில் காணப்படுவதாகவும் அறியப்படுகிறது.

பரந்த பெரிய தேச பரப்பில் ஒரே காலத்தில் நடுகை மேற்கொள்ளப்படும் பொழுது பயிர் இலகுவில் தாக்கத்திற்குள்ளாகும் காலம் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதனால் தாக்கத்தைப் பெரிதும் தவிர்த்துக் கொள்ள வாய்ப்புள்ளது தொடர்ந்து நடுகை மேற்கொள்ளும் பொழுது தாக்கம் ஏற்படும் காலம் நீடிப்பதனால் பீடைகளின் பெருக்கம் மேலும் அதிகரிக்கின்றது.

## உரமிடுதலும் பயிர் ஆரோக்கியமும்

பீடைத்தாக்கமற்ற ஆரோக்கியமான தாவரத்திலிருந்தே தரமான உணவைப் பெற முடிகிறது. போஷாக்கின்மையுடைய தாவரம் இலகுவில் பீடைகளினால் தாக்கப்படுகிறது. போஷாக்கு அதிகரிப்பதினாலும் இவ்வாறான தீய விளைவுகள் ஏற்படுவது உண்டு.

நவீன உள்ளீடுகளான செயற்கை உரம் நீர்ப்பாசனம் என்பன அறிமுகம் செய்யப்பட்டதனைத் தொடர்ந்து அநேகசந்தர்ப்பங்களில் பீடைகளின் பெருக்கம் ஏற்படுகி ... போவதுடன் மண் அரிப்பும் ஏற்படுகின்றது என்ற கருத்தும் நிலவுகின்றது. பயிர் மீதிகளுடன் பண்படுத்தாத தரையில் பயறு, போஞ்சி என்பனவற்றை நாட்டிய பொழுது போஞ்சி ஈ. பனிப்பூச்சி, ஐசிட்ஸ் என்பவைகள் முளைத்து வரும் தாவரங்களைச் சென்றடைய முடிவதில்லை. தரை காய்ந்து இருக்கும் பொழுது உழவு செய்வதனால் குறவணவன் புழு தரையில் மேற்கொண்டு வரப்பட்டு சூரிய ஒளியினால் தாக்கப்படுகின்றது.

## பயிர் இனங்களைத் தெரிவு செய்தல்

பாரம் பரிய முறையில் பீடைகளை எதிர்த்து வளரும் பயிரினங்கள் இருந்து வந்தன. தற்கால முறையில் விளைவு கூடியதும் பீடைகளை எதிர்க்க வல்ல பயிரினங்கள் விருத்தி செய்யப்படுகின்றன. எதிர்ப்புசக்தி பல வழிகளில் ஏற்படுகின்றது. உழவுக்கு உகந்ததாக இல்லாமலிருப்பதுடன் அங்கு தங்கியிருந்து முட்டையிடவும் முடியாத நிலை, தாவரத்தை உணவாக உட்கொண்டபின் ஆரோக்கியமற்றதாக விளங்குதல், பீடைகளினால் தாக்கப்பட்ட விருந்துவழங்கி குணமடைந்து திரும்பவும் வளர்ந்து பயன் பெறக்கூடியதாக இருக்கின்றது. இவ்வாறு எதிர்ப்புச் சக்தியினைக் கொண்ட பல பயிரினங்கள் இருக்கின்றன. தண்டு, ஈயை எதிர்க்க வல்ல இறுங்கு, அழுக்கணவன், ஐசிட்ஸ் என்பவற்றை எதிர்க்க வல்ல கவ்பீ, போஞ்சி, ஈயை எதிர்க்கும் போஞ்சி தண்டு கோதியை எதிர்க்கக் கூடிய சோளம் கபிலநிறத்தண்டு தத்திகளை எதிர்க்கக் கூடிய நெல்லினங்கள் என்பன குறிப்பிடத்தக்க உணவுப்பயிர்களாகும்.

## பயிர் செய்யுமிடச் சுகாதாரம்

சுகாதாரத்தைப் பேணுவதனால் பீடைகளின் வாழ்க்கை வட்டத்தில் தடங்கல் உண்டாகிறது. பயிர்மீதிகள், பீடைத் தாக்கமேற்பட்ட காய் பிஞ்சுகளை அப்புறப்படுத்தி அழிப்பதனால் பீடைகள் விருத்தி குறைகிறது.

சோளப்பயிர் மீதிகளை எரிப்பதனாலும், கால்நடைகளுக்குத் திவனமாகக் கொடுப்பதனாலும் அங்கு காணப்படும் குடம்பி, கூட்டுப்புழு என்பன அழிக்கப்படுகின்றன பயிர் அடிக்கட்டைகளை எரிப்பதனால் சுமாராக 96% குடம்பி, கூட்டுப்புழு அழிக்கப்படுகிறது.

ஈக்களினால் தாக்கப்பட்ட பழங்களைச் சேகரித்து அழிப்பதனால் புழுக்கள் தரையை அடைந்து வாழ்க்கை வட்டத்



## தேவராசா செல்வராணி

ஆண்டு இரண்டு சென்றதம்மா - அந்த
அழகு முகம் சோர்ந்ததம்மா
மாலையுடனும் மஞ்சள் குங்குமத்துடனும்
நாம் மணக்கோலம் காண்போம் என இருக்க
பெற்றாரும் உற்றாரும் பேதலித்து இன்று
பேராறாய் பெருகுகிறதே கண்ணீரம்மா
பெற்றவயிறு பற்றியெரிய பிரிந்து விட்டாயே
பேசுங்கிளியே உன்னை இழந்து
துடிக்கிறோமம்மா.

கோண்டாவில் கிழக்கு.
(6317)

குடும்பத்தினர்,
உற்றார், உறவினர்,
நண்பர்கள்

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம்
17. 02. 1914

மறைவு
18. 09. 1993

### இளையவன் மாணிக்கம்

திதி: 19. 10. 1993

இளையவன் மாணிக்கம் அவர்கள் 18. 09. 93இல் காலமானார். அன்னார் மாணிக்கம் சின்னமணியின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற சிவலிங்கம், தங்கரெத்தினம், ஞானசேகரம் (இந்தியா), கலாவதி தியாகராசா (கனடா), குணசேகரம், காலஞ்சென்ற பாலச்சந்திரன் (தம்புக்கிளி), ரவிச்சந்திரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத்தந்தையும் சிவலிங்கம், இராசமூர்த்தி ஆகியோரின் மாமனாரும் இளையவன் செல்லையா, வயிரவிஅம்மா, காலஞ்சென்ற இளையவன் தம்பு ஆகியோரின் சகோதரருமாவார்.

அவர்கள் மறைவின் 31-ம்நாள் நினைவஞ்சலியும், அந்தியேட்டிக் கிரியைகளும் 19. 10. 93 செவ்வாய்க் கிழமை (இன்று) காலை அன்னாரின் இல்லத்தில் இடம் பெறவுள்ளன. இக்கிரியைகளிலும் மதியபோசனத்திலும் அன்னாரின் பேரப்பிள்ளைகள், பெறாமக்கள், மருமக்கள், மைத்துனிமார்களையும், உற்றார், உறவினர், நண்பர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொண்டு அன்னாரின் ஆன்மாசாந்தியுடையப்பிரார்த்திக்கும்,

மயிலியதனை
தொண்டமனாறு.

மனைவி, மக்கள், மருமக்கள்.
(6316)

சிந்தனைக்கு

வெண்ணெய் இல்லாமல் நாம் வாழ முடியும்.
ஆனால் ஆயுதங்கள் இல்லாமல் வாழ முடியாது.

— ஜொஸெப் கேபெல்ஸ்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 19-10-1993

தொலைபேசி

ஆசிரியபீடம் 025-2339 நிர்வாக பீடம் 2123

த. பெ. எண் - 05

## பிக்குகளுக்கும் ஆயுதம்

“இன்று தென்னிலங்கையில் உள்ள இளைஞர்களுக்கு மூன்று தெரிவுகளே உள்ளன. ஒன்று ஆயுதப் படையில் சேர்ந்து கொள்ளுதல், இரண்டு ஜே. வி. பி. இயக்கத்துடன் இணைந்து கொள்ளுதல், மூன்று அரசியல்வாதிகளின் கைப்பொம்மையாக செயற்பட்டு சலுகை அடிப்படையில் சிறிய வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ளுதல்'' இவ்வாறு அண்மையில் யாழ். வந்து திரும்பிய சிங்கள செய்தியாளர்கள் எமது செய்தியாளர்களிடம் பேசும் போது தெரிவித்திருந்தனர்.

சிங்கள செய்தியாளர்களின் இக் கூற்றுக்கள் இன்றைய சிறிலங்காவின் நிலைபரத்தை அப்படியே படம் பிடித்து எம்முன் வைப்பன என்று கூறுவதில் தவறு ஏதும் இல்லை. ஏனெனில் அந்தளவிற்கு சிறிலங்கா இன்று இராணுவ மயமாக்கப்பட்டுள்ளது. இராணுவத்தைத் தவிர அரச தரப்பில் வேலைவாய்ப்புக்கள் என்பது இருப்பதாக இல்லை. அந்தளவிற்கு அரசாங்கம் பொருளாதார வளங்கள் யாவற்றையும் இராணுவச் செலவீட்டிற்கென ஒதுக்கி கொடுத்துள்ளது.

சிறிலங்காவின் இராணுவச் செலவீட்டிற்கு இவ்வருடம் வரவு செலவுத்திட்டத்தின் படி 1830 கோடி ரூபா ஒதுக்கப்பட்டதாயினும், உண்மையில் இராணுவத்திற்குச் செலவிட்ட தொகை 2,500 கோடி ரூபாவிற்கு அதிகம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. அந்தளவிற்கு இராணுவத் தளபாடங்கள் பெருமளவில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. தற்பொழுதும் கொள்வனவு செய்யப்பட்டுவருகின்றன.

இதேவேளை, இராணுவத்திற்கு அடுத்த வருடம் இராணுவச் செலவீட்டிற்கென வரவு செலவுத்திட்டத்தில் 2040 கோடி ஒதுக்கப்படும் என தகவல்கள் வெளியாகியுள்ளன அதேவேளை, இராணுவத்திற்கான அடுத்தவருட மொத்தச் செலவுகள் 3600 கோடிவரை செல்லும் என சில தகவல்கள் தெரிவிக்கின்றன. இவ்வாறாக இராணுவச் செலவீடு அதிகரித்துச் செல்லுமானால், அடுத்த ஆண்டில், ஆசியாவிலேயே இராணுவத்திற்கென வருமானத்தில் அதிக அளவை ஒதுக்கீடு செய்யும் நாடு என்ற நிலையை சிறிலங்கா பெற்றுக்கொள்ளும்.

அத்தோடு, இராணுவத்திற்கென ஒதுக்கப்படும் நிதி மட்டும்தான் இராணுவத்திற்கும், யுத்த தேவைக்கும் பயன் [illegible]

# யாழ்தேவி நடவடிக்கை மூலம் இராணுவம் பாடம் கற்றுள்ளது

## - இராணுவத் தளபதி சிசில் தெரிவிப்பு

(கொழும்பு)

ஒப்பரேஷன் யாழ்தேவி நடவடிக்கை இராணுவத்தினருக்கு பல பாடங்களை கற்றுத் தந்துள்ளது. எதிரிகளுக்கு எதிராக துப்பாக்கிகளை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்பதை இதில் புரிந்து கொண்டோம். சரியான திட்டம் இருந்தால் வெற்றி நிச்சயம் என்பதை இந்த நடவடிக்கை நிரூபித்தது. இவ்வாறு சிறிலங்கா இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்னா தெரிவித்தார்.

சிறிலங்கா இராணுவத்தின் 44-வது வருட நிறைவை முன்னிட்டு அநுராதபுரம் ஜய சிறி மகா போதியில் இடம்பெற்ற சமய நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில்,

பண்டைய சிங்கள அரசர்கள் தமது கொடிகளுக்கு மும்மணிகளதும் மகா சங்கத்தினதும் ஆசிகளைப் பெற்றே நாட்டையும், மக்களையும் காப்பாற்றினர். அந்த மரபில் எமது அனைத்து படைப்பிரிவுகளினதும் கொடிகளையும் சிறி மகா போதி மரத்தின் கீழ் ஆசியின் பொருட்டு சமர்ப்பித்து அவ்வாறே பெற்றுள்ளோம் எனவும் தெரிவித்தார்.

அத்துடன் கடந்த காலத்தைப் போலவே தற்போதும் படையினர் தைரியமாகவே உள்ளனர் படையில் எவர் ஒருவருக்கும் சந்தேகம் இருக்குமானால் அந்த அச்சத்தினைப் போக்குவதற்கே இந்த சமயச் சடங்கு ஒழுங்கு செய்யப்பட்டது எனவும் குறிப்பிட்டார்.

## சுதந்திர வர்த்தக வலயத்திலும் தொழிற்சட்டம் செல்லுபடியானது

### அமைச்சர் அபுசாலி தெரிவிப்பு

[கொழும்பு]

நடைமுறையிலுள்ள அனைத்து தொழிற் சட்டங்களும் சுதந்திர வர்த்தக வலயத்திலுள்ள அனைத்து தொழிற்சாலைகளுக்கும் செல்லுபடியாகக் கூடியவையாகும். இது காலவரையில் சுதந்திர வர்த்தக வலயத்தின் கீழ் இருக்கும் பதின்மூன்று தொழிற்சாலைகளின் உரிமையாளர்கள் தொழில் சட்டங்களை மீறியமைக்காக குற்றவாளிகளாக தண்டிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தொழில் தொழில்சார் பயிற்சிகளுக்கான அமைச்சர் எம். எல். எம் அபுசாலி தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் வெளிநாட்டு கம்பனிகள் இலங்கையில் முதலீடு செய்கின்றமையால் இங்கு தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள விடுமுறைகள் குறைக்கப்படமாட்டாது விடுமுறை நாட்களில் கடமையாற்றுவது அப்படியான நாட்களில் கடமையாற்றினால் கொடுக்கப்பட வேண்டிய விசேட கொடுப்பனவுகள் என்பன பற்றி ஆராய விசேட கமிட்டி ஒன்று நியமிக்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

அத்துடன் ஆயிரத்திற்கு மேற்பட்ட தொழிற்சங்கங்கள் இங்கிருக்கின்ற போதும். அவற்றில் 51 தொழிற்சங்கங்களில் மட்டுமே 50,000 ற்கும் மேற்பட்ட அங்கத்தவர் உள்ளனர் என்றும் சுட்டிக்காட்டினார்.

## புலிகளை இராணுவமூலம் தோற்கடிக்க முடியாது

### - சானக அமரதுங்க

[கொழும்பு]

தமிழீழ விடுதலைப் புலிகளை தோற்கடிக்க முடியாவிட்டாலும் கூட அதனை இராணுவ ரீதியாக ஓரங்கட்டுவது சமாதானத்திற்கு வேண்டிய ஒரு முன் நிபந்தனை என்பதை ஏற்றுக் கொள்வதாக லிபரல் கட்சித் தலைவர் டாக்டர் சானக அமரதுங்க கூறியுள்ளார்.

இது தொடர்பாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்திலிருந்து வடக்கு-கிழக்கு மக்களை தன்பால் ஈர்த்து இழுக்கக்கூடிய நியாயமான அரசியல் மற்றும் அரசமைப்பு ரீதியான சீர்திருத்தங்களை இலங்கை அரசு செயற்படுத்தாமல் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை இராணுவ வழிமுறைகள் மூலம் முழுக்கமுழுக்க தோற்கடிக்கலாம் என்பது இணையற்ற முட்டாள்தனம் ஆகும்

## மன்னை நாராயணசாமி காலமானார்

(சென்னை)

தி. மு. கவின் முக்கிய பிரமுகர்களில் ஒருவரும், தமிழக முன்னாள் அமைச்சருமான மன்னை நாராயணசாமி மன்னார்குடியிலுள்ள அவரது இல்லத்தில் நேற்று முன்தினம் காலமானார். அவரது இறுதிச் சடங்குகள் நேற்று மன்னார்குடியில் இடம்பெற்றன.

# தோட்டங்கள் கம்பெனிகளிடம் கையளிப்பதை நிறுத்தவும்

## அமைச்சர் தொண்டமான்

(கொழும்பு)

பெருந்தோட்டங்கள் தொடர்ந்தும் தனியார் கம்பெனிகளிடம் கையளிக்கப்பட்டால் தொழிலாளர் பிரச்சினைகள் மேலும் அதிகமாகும் என்று இ. தொ. கா. தலைவரும் [illegible]

இயங்கிய தோட்டங்கள் தனியார் கம்பெனி நிர்வாகங்களிடம் கையளிக்கப்பட்டதைத் தொடர்ந்து தொழிலாளர்களின் வேலை நாட்கள் குறைக்கப்பட்டும், வேலைப்பளு அதிகரிக்கப்பட்டும் நெருக்கடி [illegible]

டத்துறை கூட்டுத்தாபனம் என்பவற்றின் கீழியங்கிவரும் தோட்டங்களை நட்டத்தில் இயங்குவதாகக் கூறி தொழிலாளர்களின் அதிருப்தியைப் பெற்றுள்ள கம்பெனிகளிடம் கையளிப்பதான செயல், [illegible]

# சுதந்திரமாக இருக்க எனக்கு ஆசை

18.10.93
உரும்பிராய்

அன்புள்ள மகனுக்கு!

நீ நலமாயிருப்பாய் என நினைக்கிறேன், நானும் இருக்கிறேன் நீ எங்களைவிட்டுப் போய் ஏழு வருசமாயிற்று

அதற்குள் இங்கு எவ்வளவு மாற்றம் தெரியுமா?

நீயும், உனது நண்பர்களும் நெடுக இருக்கும், சின்னட்டி கடையடிப் பாலத்தில - இப்ப ஒரு பெடியளும் இருப்பதில்லை தேசத்திற்கு ஏதோ தேவையிருப்பதாக எல்லோரும் திரிகிறார்கள்.

எங்களின்ர ஊரில் இப்ப புதிய முகங்களை எல்லாம் பார்க்கிறம். சோகம் நிறைந்த அந்த மனிதர்கள் மூதூரிலும் கட்டைபறிச்சானிலும் நடந்தவற்றை - கதை, கதையாகச் சொல்கிறார்கள்.

அவர்களின் ஊரே அழிந்து விட்டதாம் ஊர்காவல் படையிடமும், பாதுகாப்புப் படையிடமும் அவர்கள் தமது உறவினர்களில் பலரை இழந்து விட்டார்களாம். எங்கட காணிக்கை நானும்; அவர்களுக்கு ஒரு கொட்டில் போட்டுக் கொடுத்துள்ளேன், உனக்கும் விருப்பமாக இருக்கும் என நினைக்கிறன்.

பக்கத்து விட்டுப் பொன்னம்மாவின் கடைசி மகனும் சில நாட்களிற்கு முன் இயக்கத்திற்கு போய்விட்டான். உனக்கு அவனைத் தெரியாது நீ, போகேக்கை அவனுக்கு ஏழு வயது.

அவனோட இன்னும் ஐந்து, ஆறு பெடியளும் போயிட்டாங்கள். அவர்கள்தான் இப்ப சென்றியில் நிற்கிறார்கள்.

ஒவ்வொரு நாளும் அந்தப் பக்கமாக பெரிய குண்டுச் சத்தங்கள் கேட்கும், போர் விமானமும், ஹெலியும் பதிந்து உயருவது எங்கட வீட்டில் நின்று பார்த்தால் தெரியும்.

இந்தச் சிறுவர்கள் என்னென்று அங்கே நிற்கிறார்கள் என்பது எனக்கு வியப்பாக இருக்கும்.

நேற்றிரவும் அந்தப் பக்கமாகப் பெரிய சத்தங்கள் கேட்டது. பொன்னம்மா தனது மகனை நினைத்து விட்டாள்! போலும்.

அந்த தாய் விடிந்ததும், வீதியை ஏக்கமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவளுடைய உடல் அடிக்கடி நடுங்கியது.

அவளிற்குத் தெரியும், என்றோ ஒருநாள் தன் மகனும், தேசியக் கொடியால் போர்த்தப்பட்ட உயிரற்ற உடலாக வருவானென்பது.

இப்போது இங்கே குளிர்காலம் தொடங்கிவிட்டது. மரங்கள் கூட விறைத்துப்போகும் குளிர். ஏனென்று தெரியேலை இந்த வருசம் குளிர் அதிகமாக இருக்கு. நேற்றுவரைக்கும் நீ அனுப்பிய தடித்த போர்வைக்குள்தான் படுத்தேன். ஆனால் அவர்களின் நினைவு வருகிறது. பாவங்கள், இந்தப் பனியில், குளிரில் என்ன செய்வார்கள் அந்தச் சிறுசுகள்.

இன்று காலை, அந்தப் போர்வையை, சின்னட்டி அண்ணையிடம் கொடுத்து அவர்களுக்கு அனுப்பிப் போட்டன்.

நீயும் அறிந்திருப்பாய், கவலைப்பட்டிருப்பாய், இங்கு படுமோசமாகக் குண்டு வீசப்படுகிறது என்று, உணவுக்குக்கூட சரியான கஸ்டம் என்று, ஆனால், தம்பி, எதிரியின் இந்த மோசமான நடவடிக்கைகளிற்குள் வாழ்ந்து எங்களுக்குப் பழகி விட்டது.

இப்பவெல்லாம் இதற்குள்ளேயே வாழவேணும். நாங்கள் நெஞ்சை நிமிர்த்தி - சுதந்திரமாக இருக்க வேண்டுமென்ற ஆசை எனக்கும் வந்திட்டதடா!

நல்லது, மறுகடிதத்தில் சந்திக்கிறேன்.
அன்புடன் - அம்மா.

இசுரேலிய பாராளுமன்றத்தில்

# உரை நிகழ்த்த வரும்படி அரபாத்திற்கு அழைப்பு

(டெல் அவிவ்)

ஒரு நாளில் இசுரேலிய பாரா [illegible]

டம் வரவு செலவுத்திட்டத்தின் படி 1830 கோடி ரூபா ஒதுக்கப்பட்டதாயினும், உண்மையில் இராணுவத்திற்குச் செலவிட்ட தொகை 2,500 கோடி ரூபாவிற்கு அதிகம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. அந்தளவிற்கு இராணுவத் தளபாடங்கள் பெருமளவில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. தற்பொழுதும் கொள்வனவு செய்யப்பட்டுவருகின்றன.

இதேவேளை, இராணுவத்திற்கு அடுத்த வருடம் இராணுவச் செலவீட்டிற்கென வரவு செலவுத்திட்டத்தில் 2040 கோடி ஒதுக்கப்படும் என தகவல்கள் வெளியாகியுள்ளன அதேவேளை, இராணுவத்திற்கான அடுத்தவருட மொத்தச் செலவுகள் 3600 கோடிவரை செல்லும் என சில தகவல்கள் தெரிவிக்கின்றன. இவ்வாறாக இராணுவச் செலவீடு அதிகரித்துச் செல்லுமானால், அடுத்த ஆண்டில், ஆசியாவிலேயே இராணுவத்திற்கென வருமானத்தில் அதிக அளவை ஒதுக்கீடு செய்யும் நாடு என்ற நிலையை சிறிலங்கா பெற்றுக்கொள்ளும்.

அத்தோடு, இராணுவத்திற்கென ஒதுக்கப்படும் நிதி மட்டும்தான் இராணுவத்திற்கும், யுத்த தேவைக்கும் பயன்படுகின்றன என்பதல்ல. பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள், சமூக சேவைகள் என்பனவற்றிற்கு ஒதுக்கப்படும் நிதியின் பயன்பாடும் இராணுவத் தேவைக்குப் பயன்பட்டு வருகின்றன. பெரும்பாலும் யுத்தத் தேவைக்கென பல திணைக்கள தனியார்துறை வாகனங்கள் ஆயுதப் படையினர் பயன்படுத்துவதை சுட்டிக்காட்டலாம். மேலும் இராணுவத்தின் சேம நலனுக்கென பலதிணைக்களங்களில் இருந்து நிதி திரட்டப்படுவதையும் காணலாம். இதன் உச்சக்கட்டமாக பாடசாலைகளை இராணுவ பயிற்சி நிலையங்களாக மாற்றும் அளவிற்கு அரசு சென்றுள்ளது.

இவ்வாறாக, பொருளாதார வளங்கள் பெருமளவில் திசை திருப்பப்பட்டுள்ளதற்கு ஏற்ப ஆயுதப்படை பெரும் அளவில் விரிவாக்கம் பெற்றுள்ளது. சிறிலங்கா ஆயுதப்படை என்ற பெயரில் இன்று யார் யாரை உள்ளடக்குவது என்ற நிலை உருவாகியுள்ளது. ஏனெனில், இராணுவம், கடற்படை, விமானப்படை என்பனவற்றில் உள்ளவர்கள் தொடக்கம் சாதாரண சிங்களக் குடிமக்கள் வரை ஆயுதபாணிகள் ஆக்கப்பட்டுள்ளனர்.

அதாவது சிறிலங்கா இராணுவம் இன்று சுமார் ஒருலட்சத்தை எட்டிப்பிடித்துள்ளது. இதேவேளை, கடற்படை, விமானப்படை என்பன ஒவ்வொன்றும் தலா 10,000 பேரைத் தாண்டியுள்ளன. இதற்கு அப்பால், விசேட அதிரடிப்படை, பொலிஸ்படை என சுமார் 50,000 பேர் வரையில் உள்ளனர். இவர்கள் பொலிசாரின் கடமையை மட்டுமல்ல. ஆயுதப்படையின் குறிப்பாக இராணுவத்தின் கடமைகளையும் கவனித்துவருகின்றனர்.

இவற்றைத் தவிர தேசிய தொண்டர்படை எனவும், ஊர்காவற்படை எனவும், பல ஆயிரம் பேர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். இவற்றில் ஆண், பெண் இருபாலர்களும் அடங்குகின்றனர். இவர்கள் ஆயுதப் பயிற்சி பெற்றவர்கள். ஆயுதப்படையின் கடமைகளையும் சிலவேளை கவனிக்கின்றனர். அதேவேளை, எல்லை ஓரப் பாதுகாப்பிலும் ஈடுபட்டுள்ளனர். இவர்களுக்கு நவீன ரக ஆயுதங்களும் வழங்கப்பட்டுள்ளன. அத்தோடு கணிசமான சம்பளமும் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், சிறிலங்காவில், ஆயுதப்படையைத் தவிர இலகுவாக வேறு எதிலும் வேலைவாய்ப்பு பெற்றுக் கொள்ள முடியாது போனதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. இதேவேளை மேலும் இந்நிலை தொடருமானால் விரைவில் பிக்குகள் ஆயுதபாணிகள் ஆகிவிடுவர். சிறிலங்காவில் பௌத்த பிக்குகள் போதிக்கும் இனவெறிக்கு இது ஒன்றும் பாரதூரமானதொன்றாக எவராலும் கருதப்படப் போவதுமில்லை.

---

சமாதானத்திற்கு வேண்டிய ஒரு முன் நிபந்தனை என்பதை ஏற்றுக் கொள்வதாக லிபரல் கட்சித் தலைவர் டாக்டர் சானக அமரதுங்க கூறியுள்ளார்.

இது தொடர்பாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள அவர் மேலும் தெரிவிக்கை

---

மைப்பு ரீதியான சீர்திருத்தங்களை இலங்கை அரசு செயற்படுத்தாமல் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை இராணுவ வழிமுறைகள் மூலம்முழுக்கமுழுக்கதோற்கடிக்கலாம் என்பது இணையற்ற முட்டாள்தனம் ஆகும்

---

முகர்களில் ஒருவரும், தமிழக முன்னாள் அமைச்சருமான மன்னை நாராயணசாமி மன்னார்குடியிலுள்ள அவரது இல்லத்தில் நேற்று முன்தினம் காலமானார். அவரது இறுதிச் சடங்குகள் நேற்று மன்னார்குடியில் இடம்பெற்றன.

---

# தோட்டங்கள் கம்பெனிகளிடம் கையளிப்பதை நிறுத்தவும்

## அமைச்சர் தொண்டமான்

(கொழும்பு)

பெருந்தோட்டங்கள் தொடர்ந்தும் தனியார் கம்பெனிகளிடம் கையளிக்கப்பட்டால் தொழிலாளர் பிரச்சினைகள் மேலும் அதிகமாகும் என்று இ. தொ. கா. தலைவரும் அமைச்சருமான எஸ். தொண்டமான் கூறியுள்ளார்.

இது தொடர்பாக பெருந்தோட்டத்துறை அமைச்சர் ரூபா கருணாதிலக்கவிற்கு அமைச்சர் தொண்டமான் எழுதியுள்ள கடிதமொன்றில் மேலும் குறிப்பிடுகையில்,

பெருந்தோட்டத்துறையைச் சேர்ந்த நட்டத்தில் இயங்கிய தோட்டங்கள் தனியார் கம்பெனி நிர்வாகங்களிடம் கையளிக்கப்பட்டதைத் தொடர்ந்து தொழிலாளர்களின் வேலை நாட்கள் குறைக்கப்பட்டும், வேலைப்பளு அதிகரிக்கப்பட்டும் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன.

தோட்டத் தொழிலாளர்களிடையே ஏற்பட்டிருந்த அதிருப்தி நிலையை அரசுக்கு எதிரான சக்திகள் தங்களின் அரசியல் மற்றும் இதர நோக்கங்களுக்காக பயன்படுத்திக் கொண்டுள்ளன. இதேவேளை ஜனதா தோட்ட அபிவிருத்தி சபை மற்றும் பெருந்தோட்டத்துறை கூட்டுத்தாபனம் என்பவற்றின் கீழியங்கிவரும் தோட்டங்களை நட்டத்தில் இயங்குவதாகக் கூறி தொழிலாளர்களின் அதிருப்தியைப் பெற்றுள்ள கம்பெனிகளிடம் கையளிப்பதான செயல், தொழிலாளர்களின் உணர்ச்சிகள் கவனத்துக்கு எடுக்கப்படாமையுடன் இக்கம்பெனிகள் தொடர்ந்தும் தோட்ட நிர்வாகத்தில் இயங்குவதை நிராகரிப்பதும் ஆகும். நீண்ட காலத்தில் எதிர்ப்பினை ஏற்படுத்தும் ஒரு நடவடிக்கையாகவும் இது அமையும் என்றும் தெரிவித் துள்ளார்

---

# ஹெய்ட்டி மீது படைபலம் அமெரிக்கா பிரயோகிக்கும்?

(வாசிங்டன்)

ஹெய்ட்டி நாட்டின் மீது இராணுவத் தலையீடு செய்ய வேண்டிய நிலை ஏற்படலாம் என்று அமெரிக்கா கூறியுள்ளது. அந்த நாட்டில் இடம்பெற்றுவரும் சம்பவங்களை வாசிங்டன் உன்னிப்பாகக் கவனித்து வருவதாகவும் தேவையேற்பட்டால் அங்கிருக்கும் சுமார் ஆயிரத்துக்கு மதிகமான அமெரிக்கர்களை அழைத்து வர நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் ஐ.நாவுக்கான அமெரிக்கத் தூதுவர் கூறியுள்ளார்.

இதேவேளை இங்கிருந்து நூற்றுக்கணக்கான வெளிநாட்டவர்கள் வெளியேறி வருவதாகவும், அமெரிக்கா மற்றும் கனடா நாட்டின் போர்க் கப்பல்கள் ஹெய்ட்டியை முற்றுகையிட்டிருப்பதாகவும், தலைநகர் 'போர்ட் ஒப் பிரின்சில்' துப்பாக்கி வேட்டுக்கள் கேட்டதாகவும் கூறப்படுகிறது.

ஹெய்ட்டியில் இருக்கும் அமெரிக்கத் தூதுவரகம் மீது தாக்குதல் நடத்தப்பட்டால் படை பல பிரயோகம்உடனடியாகவே இடம்பெறலாம் எனவும்தெரியவருகிறது.

---

# பொருளாதார வலிமைபெற இலங்கைக்கு வாய்ப்புண்டு

## ஜப்பான் தெரிவிப்பு

[டோக்கியோ]

ஆசியப் பிராந்தியத்தில் பொருளாதார வலிமை மிக்க நாடுகளில் ஒன்றாக மாறுவதற்குரிய சகல வசதிகளையும், வளங்களையும் இலங்கை கொண்டிருப்பதாக ஜப்பான் கூறியுள்ளது. இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி முயற்சிகளுக்கும் ஜப்பான் தொடர்ந்தும் உதவி வழங்கவுள்ளது என்று கொழும்பிலுள்ள ஜப்பானியத் தூதுவரகத்தின் முதலாவது செயலாளர் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், இலங்கையில் தற்போது ஆகக் கூடுதலாக முதலீடு செய்துள்ள நாடு ஜப்பானே ஆகும் எனவும் தெரிவித்தார்.

---

# மாஸ்கோவில் அவசரகால நிலை தளர்த்தப்பட்டு விட்டது

(மாஸ்கோ)

மாஸ்கோவில் கடந்த இரண்டு வார காலமாக அமுலிலிருந்த அவசரகாலச் சட்டம் தற்போது நீக்கப்பட்டுள்ளது.

இதனைத்தொடர்ந்து பாராளுமன்றத் தேர்தல்கள் இன்னும் இரு மாதங்களில் இடம்பெற இருப்பதால் அரசியல்வாதிகள் தமது நடவடிக்கையில் ஈடுபடுவதில் அக்கறை காட்டி வருகின்றனர். யெல்ட்சின் எதிர்ப்பாளர்கள் ஆரம்பித்த கிளர்ச்சியை அடுத்து சுமார் இரு வாரங்களிற்கு முன்னர் பிறப்பிக்கப்பட்ட அவசர காலச் சட்டம் தளர்த்தப்பட்டுள்ள போதிலும் கம்யூனிஸ்ட் கடும் கோட்பாட்டாளர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் தொடரும் எனவும் அவர்களுக்கு சார்பான பத்திரிகைகளின் மீதான தடையுத்தரவு தொடர்ந்தும் அமுலில் இருக்கும் எனவும் கூறப்படுகிறது.

---

# உத்தரப்பிரதேசசட்டசபைக்கு அருத்தமாதத்தில்வாக்களிப்பு

(டில்லி)

உத்தரப் பிரதேச மாநில சட்டப் பேரவைக்கான தேர்தல் அட்டவணைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. வேட்பு மனுத் தாக்கல் செய்வதற்கான கடைசித் தினம் 25ஆம் திகதி என்றும், அடுத்த மாதம் 18ஆம், 21ஆம் திகதிகளில் அங்கு தேர்தல்கள் நடைபெறும்.

மத்திய பிரதேசம், மிசோராம் மாநில சட்டப் பேரவை தேர்தல் அறிவிப்புகள் விரைவில் வெளிவரலாம் என்றும், ராஜஸ்தான், டில்லி, இமாசலப் பிரதேசம் பகுதிகளில் தேர்தல் பணிகள் சூடுபிடித்துள்ளன என்றும் தெரியவருகிறது. உத்தரப்பிரதேச சட்டப் பேரவையில் 425 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவிருப்பது தெரிந்ததே.

---

ஆனால் அவர்களின் நினைவு வருகிறது. பாவங்கள், இந்தப் பனியில், குளிரில் என்ன செய்வார்கள் அந்தச் சிறுசுகள்.

இன்று காலை, அந்தப் போர்வையை, சின்னட்டி அண்ணையிடம் கொடுத்து அவர்களுக்கு அனுப்பிப் போட்டன்.

நீயும் அறிந்திருப்பாய், கவலைப்பட்டிருப்பாய், இங்கு படுமோசமாகக் குண்டு வீசப்படுகிறது என்று, உனவுக்குக்கூட சரியான கஸ்டம் என்று, ஆனால், தம்பி, எதிரியின் இந்த மோசமான நடவடிக்கைகளிற்குள் வாழ்ந்து எங்களுக்குப் பழகி விட்டது.

இப்பவெல்லாம் இதற்குள்ளேயே வாழவேணும். நாங்கள் நெஞ்சை நிமிர்த்தி - சுதந்திரமாக இருக்க வேண்டுமென்ற ஆசை எனக்கும் வந்திட்டதடா!

நல்லது, மறுகடிதத்தில் சந்திக்கிறேன்.
அன்புடன் - அம்மா.

---

**இசுரேலிய பாராளுமன்றத்தில்**

# உரை நிகழ்த்த வரும்படி அரபாத்திற்கு அழைப்பு

(டெல் அவிவ்)

இசுரேலிய பாராளுமன்றத்தில் உரையாற்றுவதற்கு விடுக்கப்பட்ட அழைப்பை பாலஸ்தீனிய தலைவர் யாசிர் அரபாத் ஏற்றுக்கொண்டுள்ளார். இசுரேலியவெளிநாட்டு அமைச்சர்சிமொன் பெரஸ் அரபாத்திற்கு இந்த அழைப்பை விடுத்திருப்பதாகவும்கூறப்படுகிறது. மூன்று தினங்களைக் குறிப்பிட்ட அவர் அதில் ஏதாவது ஒரு நாளில் இசுரேலிய பாராளுமன்றத்தில் அரபாத் உரையாற்றவேண்டுமென அழைப்பு விடுத்திருந்தார். இந்தத் தகவலை இசுரேலிய பத்திரிகைகள் நேற்று வெளியிட்டன.

இதேவேளை பாலஸ்தீனிய தலைவர் அரபாத் காஸாப் பகுதிக்குத் திரும்பிய பின்னர் ஆறு மாதங்களுக்கு இசுரேலிய படையினர் பாதுகாப்பு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக ஜோர்தான் பத்திரிகையொன்று கூறியுள்ளது.

மேலும் வாசிங்டனில் நடைபெறவிருந்த அரபு இசுரேலிய பன்னிரண்டாவது சுற்றுப் பேச்சுக்கள் அடுத்தமாத இறுதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

---

# விஜயம் ரத்து

(சென்னை)

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா தமது நேற்றைய டில்லி விஜயத்தை கடைசி நேரத்தில் திடீரென ரத்து செய்தார். உடல் நலக் குறைவே டில்லி விஜயம் ரத்தானதற்கு காரணம் என தெரிவிக்கப்பட்டது.

---

# காஷ்மீர் பிரச்சினையில் பாக். தலையீடு உள்ளது

## - சவான் தெரிவிப்பு

(டில்லி)

காஷ்மீரில் இருக்கும் புனித பள்ளிவாசலைசேதமாக்கமேற்கொள்ளப்படும்சதியில் பாகிஸ்தான்சம்பந்தப்பட்டிருப்பதாக உள்துறைஅமைச்சர் எஸ். பி. சவான் கூறியுள்ளார்.

சிறீநகரில் இருக்கும் ஹஸ்ரத் பத்த் புனித தலம் தற்போது இந்தியப் படையினரின் முற்றுகைக்கு உள்ளாகியிருப்பதும் அங்கிருக்கும் தீவிரவாதிகளை ஆயுதங்களைக் கையளித்து சரணடையும் படி படையினர் கோரி வருவதும் தெரிந்ததே.

---

# மாற்றுப் பயிர்ச் செய்கை மருந்தில்லா கமச் செய்கை

ஈழநாதம்

# தீவிரவாதிகள் சரணடையும்வரை முற்றுகை தொடரும்

## இந்திய இராணுவம் அறிவிப்பு

(டில்லி)

காஷ்மீரில் முஸ்லிம்களின் புனித தலம் என்று கூறப்படும் மசூதி மீதான இந்திய இராணுவத்தின் முற்றுகை நான்காவது நாளாக நேற்றும் தொடர்ந்து மசூதியினுள் இருக்கும் காஷ்மீர் தீவிரவாதிகள் சரணடையும்வரை இந்த முற்றுகை தளர்த்தப்பட மாட்டாது என இந்திய தளபதி ஜெனரல் ஜோஸி நேற்று தெரிவித்தார்.

இதனிடையே நேற்று இப்பகுதியில் முஸ்லிம் தீவிரவாதிகள் ரொக்கட் தாக்குதல் நடத்தியதையடுத்து மேலும் இந்திய துருப்புக்கள் இப்பள்ளிவாசல் முற்றுகைக்காக நேற்று வரவழைக்கப்பட்டனர். மசூதியினுள் இருக்கும் தீவிரவாதிகளின் விருப்பின் பேரில் தற்போது இந்திய அதிகாரிகளுக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையே மசூதியுள்ளேயே பேச்சுக்கள் நடைபெற்று வருகின்றன

## மசூதிக்கு வழங்கப்பட்ட நீர், மின்சாரம் வெட்டு

(டில்லி)

காஷ்மீர் ஹசரத்பால் மசூதியை முற்றுகையிட்டிருக்கும் இந்திய இராணுவம் நேற்று மசூதிக்கான நீர், மின்சார விநியோகத்தை துண்டித்தது. இதன்மூலம் உள்ளே இருக்கும் காஷ்மீர் தீவிரவாதிகளை சரணடையச் செய்ய முடியும் என இந்தியஇராணுவம் எதிர்பார்க்கின்றது.

மசூதிமுற்றுகையை இராணுவம் இன்று தளர்த்தா விட்டால் ஊரடங்கையும் மீறி தாம் மக்களைத்திரட்டி மசூதியினுள் நுழைய நேரிடும் என காஷ்மீரின் 31 போராளிக் குழுக்களின் கூட்டுக்குழு எச்சரித்துள்ளது அயோத்தி மசூதி தகர்க்கப்பட்டதை அனுமதித்த அதேஅரசு இப்போது காஷ்மீரின் புனித மசூதியை இழிவுபடுத்த அனுமதித்துள்ளது என இக்குழு கண்டித்துள்ளது. முஸ்லிம் கெரிலாக்கள் மசூதிகளைபயன்படுத்தும் உரிமையுண்டுஎன இக்குழுவின் தலைவர்களில் ஒருவர் குறிப்பிட்டார். முற்றுகையைஇந்தியப்படை இவ்வார இறுதிவரை நீடித்தால் வெள்ளிக்கிழமை சிறிநகருக்கு தொழுகைக்கு வரும் அனைவரையும் திரட்டி படைகளுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்வோம் எனவும் எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

இந்திய துருப்புகள் ஹசரத்பால் மசூதியின் மூன்று பகுதிகளைச் சுற்றி நிலைஎடுத்துள்ளனர் அருகிலுள்ள ஏரிக்கு செல்லும் நான்காவது பாதை ஒள்ந்திருந்து தாக்கப்படுவதற்கு வசதியானது என்பதால் துருப்புகள் இப்பகுதியை கைவிட்டுள்ளனர். மசூதியில் ஒருவித அமைதி நிலவுவதாகவும் மசூதி மாடிகளில் சில சமயங்கள் தீவிரவாதிகள் தென்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### அதிபர்களுக்கான சந்திப்பு

கல்வி அபிவிருத்திக்கழக நிதிக்கு, மாவீரர்கள் சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று நடைபெறவிருப்பதால் வேலணை, ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணம், நல்லூர் கல்விக் கோட்ட அதிபர்கள் நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்திற்கும்,

சண்டிலிப்பாய் சங்கானை, தெல்லிப்பழை கல்விக் கோட்ட அதிபர்கள் நாளை புதன்கிழமை பி.ப 2 மணிக்கு யாமானிப்பாய் இந்துக் கல்லூரி மண்டபத்திற்கும் தவறாது வருகை தரும்படி பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் கேட்டுள்ளனர்.

## தகவல் கொடுத்தவர் மீது பொலிசார் தாக்குதல்

(கொழும்பு)

இலஞ்ச இலாகாவுக்குத் தகவல் கொடுத்தார் என்ற காரணத்துக்காகப் பொலிஸ் கோஷ்டியொன்று தகவல் கொடுத்தவரைத் தாக்கியுள்ளது.

இதுபற்றி இலஞ்ச இலாகாவுக்குச் சம்பந்தப்பட்ட நபர் புகார் செய்ததையடுத்து எட்டுப் பொலிஸ்காரர்கள் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டு கொழும்பு பிரதம நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர். இவர்கள் தலா 10,000 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் இச்சம்பவம் நடந்த கொஸ்கொடைப் பகுதிக்கு இவர்கள் செல்லவும் தடை செய்யப்பட்டுள்ளனர்.

சங்கானை வலி மேற்கு பிரதேச

## மருந்துப் பொருள்களுக்கு பெரும் தட்டுப்பாடு

[தொல்புரம்]

தெல்லிப்பழை மாவட்ட அரசினர் ஆஸ்பத்திரியில் மருந்து கட்டுவதற்கு தேவையான அத்தியாவசியப்பொருள்களுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது

மானிப்பாயில் இயங்கிவரும் மேற்படி வைத்தியசாலையில் பஞ்சு, மற்றும் மருந்து கட்டுவதற்குத் தேவையான லின்ட், கோஸ் போன்றவற்றிற்கு பலத்த தட்டுப்பாடு நிலவுகிறது இதனால் மருந்து கட்ட வரும் காயப்பட்ட நோயாளருக்கு தேவையான மருத்துவ வசதிகளைமேற்கொள்வதற்கு முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது. (41)

## கணித ஆய்வு கூடம்

## குமாரி கப்பலின் ஒப்பந்த காலம் முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்திற்கான அத்தியாவசிய உணவு மற்றும் பொருள்களை எடுத்து வரும் பணியில் ஈடுபட்டு வரும் 'குமாரி' கப்பலின் ஒப்பந்த காலம் நேற்று முன்தினத்துடன் முடிவடைந்து விட்டதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

மேலும் 'குமண' கப்பலின் ஒப்பந்த காலமும் விரைவில் முடிவடையவுள்ளது. குமண கப்பல் இவ் ஒப்பந்த காலத்தில் இன்னும் ஒருதடவை மட்டுமே பருத்தித்துறை நோக்கி பொருள்களுடன் வரும் என அவ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. [பா] [நி]

## நரோமாவில் செல்லும் பயணிகள் கவனத்திற்கு

[நமது நிருபர்]

நரோமா கப்பல் மூலம் கொழும்பு செல்ல பதிவு செய்தோர் நாளை பிற்பகல் 1-00 மணிக்கு பருத்தித்துறை துறைமுகத்திற்கு வருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

இக்கப்பல் இன்று புறப்படுமென முன்பு தெரிவிக்கப்பட்ட போதிலும் பருத்தித்துறை துறைமுகத்தில் இருந்து காங்கேசன்துறை துறைமுகத்திற்கு பயணிகளை ஏற்றிச் செல்வதற்கு கப்பல் இல்லாததனாலேயே ஒரு நாள் தாமதித்து நாளைக்கு புறப்படவுள்ளதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன,

இதே தினம் தற்போது காங்கேசன்துறையில் தீவுப்பகுதிக்கான உணவுப் பொருள்களை இறக்கிக் கொண்டிருக்கும் குமாரி கப்பலும் திருக்கோணமலைக்கு புறப்படவுள்ளதாக தெரியவருகின்றது. [சி]

## பிரதேச செயலகங்களின் கீழ் கூட்டுறவுத் திணைக்களம்

(திருக்கோணமலை)

நிருவாகத்தைப் பரவலாக்கும் திட்டத்தின் கீழ் எதிர்வரும் ஜனவரி முதல் கூட்டுறவுத் திணைக்களம் பிரதேச செயலாளர்களின் கீழ் இணைக்கப்படவுள்ளது. கூட்டுறவுத் திணைக்களத்திலுள்ள ஊழியர்கள் பிரதேச செயலாளர் அலுவலகங்களுக்கு மாற்றப்படுவர் ஜனவரி முதல் கூட்டுறவுத் திணைக்களம் ஓர் ஆணையாளருடனும் ஓர் உதவி ஆணையாளருடனும் இயங்கும்.

இத் தகவலை வடக்கு - கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் எஸ். வேலாயுதம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

அண்மையில் திருக்கோணமலை கூட்டுறவுக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற மாநாட்டில் மேற்கண்டவாறு தெரிவித்த அவர், அரசின் இத்திட்டமானது வடக்கு-கிழக்கு மாகாணங்களைப் பொறுத்தவரையில் மிகவும் பாதிப்பான ஒன்றாகும். இரு மாகாணங்களின் அபிவிருத்தியிலும் கூட்டுறவு பெரும்பங்கு வகிக்கிறது.

இந்த பரவலாக்கல் நடவடிக்கை அரசின் முன்னைய முடிவிற்கு அமையவே நடைபெறவுள்ளது. எனினும் முன் யோசனையுடன் சில நடவடிக்கைகளை எடுத்திருந்தால் கூட்டுறவுத் திணைக்களம் தனியாக இயங்க முடியும். ஆனால் நாம் இப்போது இறுதிக் கட்டத்தில் உள்ளோம். எனவே இனிமேல் ஏதுவும் செய்யமுடியாது என்றார்.

இணைப்புக்

இடம்பெற உள்ளது. இக் கூட்டத்தில் பல முக்கிய விடயங்கள் ஆராயப்பட உள்ளதால் சகல மாணவர்களையும் கலந்துகொள்ளும்படி கேட்டுக் கொண்டுள்ளனர். [07]

மாணவர்

கப்பட்ட பொழுதும் 92/93 கல்வி ஆண்டில் 58 மாணவர்களே இம்முறை தகுதியானவர்

## வடபகுதி நிலை குறித்து தெற்கில் புகைப்படக் கண்காட்சி

(நமது நிருபர்)

வடக்கில் சிறிலங்காவின் முப்படைகளும் நடாத்திவரும் கண்மூடித்தனமான தாக்குதல்களையும் இராணுவ இழப்புக்களையும் சித்திரிக்கும் புகைப்படக் கண்காட்சி ஒன்று விரைவில் கொழும்பில் நடைபெறவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை கொழும்பிலிருந்து வெளிவரும் 'ராவய' என்ற சிங்களப் பத்திரிகை நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

மேற்படி பத்திரிகையின் குழு ஒன்று அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்தது தெரிந்ததே.

இக் குழுவினர் யாழ். குடாநாட்டில் ஒருவாரம் தங்கியிருந்து சிறிலங்காபடையினர் கடந்தகாலங்களில் குடாநாடு மீது நடாத்திய கண்மூடித்தனமான தாக்குதல்களால் சிதைவுற்ற கட்டடங்கள், படுகொலை செய்யப்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் ஆகியோரின் புகைப்படங்கள் 'யாழ் தேவி' இராணுவ நடவடிக்கையில் விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்ட டாங்கிகள் மற்றும் கவசவாகனங்கள் ஆகியன உட்பட பலவற்றை புகைப்படம் எடுத்துச் சென்றனர்.

வடபகுதி நிலைமை குறித்து சிறிலங்கா அரசுமேற்கொண்டு வரும் பொய்ப் பிரசாரங்களை தென்பகுதி மக்களுக்கு புரியவைப்பதற்காகவே இப் புகைப்படக் கண்காட்சி நடாத்தப்படவுள்ளதாக 'ராவய' குழுவினர் தெரிவித்தனர்.

பங்கீட்டு அட்டைகள் திடீர் அதிகரிப்பு

## மண்ணெய் வழங்குவதில் செயலகத்திற்கு சிரமம்

(யாழ்ப்பாணம்)

பலநோக்குகூட்டுறவுச்சங்கங்களினால் யாழ். செயலகத்திற்கு வழங்கப்படும் பங்கீட்டு அட்டைகளின் எண்ணிக்கை அடிக்கடி பெருமளவில் வேறுபடுவதால் பொருள்களை வழங்குவதில் பெரும் சிரமம் ஏற்படுவதாக யாழ் செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக மண்ணெண்ணெய் பெறும்போது பங்கீட்டு அட்டைகளின் எண்ணிக்கை திடீர் திடீர் என ஆயிரக் கணக்கில் அதிகரிப்பதால் மண்ணெண்ணெயினை பங்கிட்டு வழங்குவதில் பெரிய சிரமம் ஏற்படுவதாகவும் சீரான முறையில் பொருள்களை விநியோகம் செய்யமுடியாதுஉள்ளதாகவும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (நி), (பா)

## சகல கப்பல்களிலும் தபால்கள் அனுப்பிவைக்க ஏற்பாடு

[யாழ்பபாணம்]

யாழ். குடா நாட்டிற்கான உள்நாட்டு, வெளி நாட்டு தபால்களை இனிமேல் கிரமமான முறையில் அனுப்புவதற்கான சகல நடவடிக்கைகளையும் பிரதி தபால் அதிபர் நாயக கட்டுப்பாட்டாளர் மேற்கொண்டு வருகின்றார்

யாழ் குடா நாட்டிற்கு அத்தியாவசிய பொருள்களை ஏற்றிவரும் வாதுவ, குமாரி, றுகுணு, மரினால் ஆகிய கப்பல்களில் இராணுவகட்டுப்பாடு அற்ற பகுதிகளுக்கும் 'ஓசன் றேட்' கப்பல் மூலம் இராணுவ கட்டுப்பாட்டு பகுதிகளுக்கும் தபால் அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக பிரதி தபால் அதிபர் நாயக கட்டுப்பாட்டாளர் ஆ. சிவகுலதாசன் யாழ். தபால் உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

குமண கப்பலின் கட்டணங்களை சர்வதேச அலகில் செலுத்துமாறு வேண்கோள் விடுத்ததாகவும்இதனை அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் பிரிவில் எயர்கொமடோர் டி.பி. சிறிவர்தன மறுத்துள்ளதால் குமண கப்பலில் தபால் அனுப்பப்படமாட்டாது எனவும் அவர் தெரிவித்துள்ளார். [நி],[பா]

## பிறிமா ஊழியர்கள் வேலைநிறுத்தத்திற்கு திட்டம்

(கொழும்பு)

தமது கோரிக்கைகளை "பிறிமா" நிறுவனம் ஏற்காதுவிட்டால் சுமார் 400க்கு மேற்பட்ட "பிறிமா" தொழிற்

ளனர்,

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, இராணுவ அச்சுறுத்தல் போன்ற பல்வேறு காரணங்களை முன்வைத்து இப்

த்த அதே அரசு இப்போது காஷ்மீரின் புனித மசூதியை இழிவு படுத்த அனுமதித்துள் ளது என இக்குழு கண்டித் துள்ளது. முஸ்லிம் கெரிலாக் கள் மசூதிகளைபயன்படுத்தும் வித அமைதி நிலவுவதாகவும் மசூதி மாடிகளில் சில சமயங் கள் தீவிரவாதிகள் தென்படுவ தாகவும் தெரிவிக்கப்படு கிறது.

தெல்லிப்பழை கல்விக் கோட்ட அதிபர்கள் நாளை புதன்கிழமை பி ப 2 மணி க்கு யா மானிப்பாய் இந்துக் கல்லூரி மண்டபத்திற்கும் தவறாது வருகை தரும்படி பிரதிக் கல்விப் பணிப்பாளர் கள் கேட்டுள்ளனர்.

முதல் கூட்டுறவுத்திணைக் களம் ஓர் ஆணையாளரு டனும் ஓர் உதவி ஆணையாளரு டனும் இயங்கும்.

இத் தகவலை வடக்கு - கிழக்கு மாகாண கூட்டுறவு அபி விருத்தி ஆணையாளர் எஸ். வேலாயுதம்பிள்ளை தெரிவித் ...றவு பெரும்பங்கு வகிக்கிறது.

இந்த பரவலாக்கல் நடவ டிக்கை அரசின் முன்னைய முடிவிற்கு அமையவே நடைபெறவுள்ளது. எனினும் முன் யோசனையுடன் சில நட வடிக்கைகளை எடுத்திருந்தால் கூட்டுறவுத் திணைக்களம் தனியாக இயங்க முடியும். ஆனால் நாம் இப்போது இறு திக் கட்டத்தில் உள்ளோம். எனவே இனிமேல் எதுவும் செய்யமுடியாது என்றார்.

# தகவல் கொடுத்தவர் மீது பொலிசார் தாக்குதல்

(கொழும்பு)

இலஞ்ச இலாகாவுக்குத் தக வல் கொடுத்தார் என்ற கார ணத்துக்காகப் பொலிஸ் கோஷ்டியொன்று தகவல் கொடுத்தவரைத் தாக்கியுள் ளது.

இதுபற்றி இலஞ்ச இலாகா வுக்குச் சம்பந்தப்பட்ட நபர் புகார் செய்ததையடுத்து எட் டுப் பொலிஸ்காரர்கள் சந் தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டு கொழும்பு பிர தம நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர். இவர்கள் தலா 10,000 ரூபா பிணையில் செல்ல அனுமதிக் கப்பட்டுள்ளதுடன் இச்சம்ப வம் நடந்த கொஸ்கொடைப் பகுதிக்கு இவர்கள் செல்லவும் தடை செய்யப்பட்டுள்ளனர்.


சங்கானை வலி மேற்கு பிரதேச

வர்த்தக சங்க ஆதரவில்

## "மாபெரும் போர்க்கால கருத்தரங்கு"

காலம் : 20-10-93 புதன்கிழமை மாலை 4.00 மணி

இடம் : வட்டு திருஞான சம்பந்த வித்தியாசாலை (ஆரம்பப் பிரிவு மண்டபம்)

நிகழ்ச்சி :

- கருத்தரங்கு
- பட்டிமண்டபம்
- நாடகம்
- கலை நிகழ்ச்சி
- வீடியோ படக்காட்சி

பட்டிமண்டபம்

## "தமிழீழ போராட்டத்திற்கு மக்களின் பங்களிப்பு"

முழுமையற்றதா? முழுமையானதா?

நடுவர்

திரு. அ. குமாரவேலு

| முழுமையற்றது | முழுமையானது |
|---|---|
| திரு. சி. வரதராஜன் | திரு. த. சிவகுமாரன் |
| திரு. இ. செல்வவடிவேல் | திரு. க. கலாகரன் |
| திரு. எஸ். கணேஷ் | திரு. கி. மகேந்திரன் |

இந்நிகழ்வில் அனைத்து தமிழீழ மக்களையும் தவறாது பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

"வலி மேற்கு பிரதேச வர்த்தக சங்கம்"

சங்கானை

(6321)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 19ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


# மருந்துப் பொருள்களுக்கு பெரும் தட்டுப்பாடு

[தொல்புரம]

தெல்லிப்பழை மாவட்ட அரசினர் ஆஸ்பத்திரியில் மருந்து கட்டுவதற்கு தேவை யான அத்தியாவசியப்பொருள் களுக்கு தட்டுப்பாடு நிலவு கிறது

மானிப்பாயில் இயங்கிவரும் மேற்படி வைத்தியசாலையில் பஞ்சு, மற்றும் மருந்து கட்டு வதற்குத் தேவையான லின்ட், கோஸ் போன்றவற்றிற்கு பலத்த தட்டுப்பாடு நிலவுகி றது. இதனால் மருந்து கட்ட வரும் காயப்பட்ட நோயாளர் ருக்கு தேவையான மருந்துவ வசதிகளை மேற்கொள்வதற்கு முடியாத நிலை ஏற்பட்டுள்ள தாக வைத்தியசாலை வட்டா ரங்களிலிருந்து தெரியவருகின் றது. (41)

# கணித ஆய்வு கூடம் நேற்று திறப்பு

யாழ். இந்து மகளிர்கல்லூரி யில் நேற்று கணித ஆய்வுகூட மொன்று திறந்து வைக்கப்பட் டது. இடை நிலை மட்ட மாணவிகள் நலன் கருதி அமை க்கப்பட்டுள்ள இந்த ஆய்வு கூடத்தை, உதவிக் கல்விப் பணிப்பாளர் (கணிதம்) திரு மதி அ. வேதநாயகம் அவர் கள் திறந்து வைத்தார்கள். மேற்படி திறப்புவிழா கல்லூரி அதிபர் திருமதி நாகராசா அவர்கள் தலைமையில் நடை பெற்ற போது, கணித சேவைக்கால ஆலோசகர் களும், ஏனைய பாடசாலை களின் கணித ஆசிரியர்களும், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். உதவிக் கல்விப் பணிப்பாளரும் அதிபரும், கணித சேவைக் கால ஆலோசகர் திரு. எஸ். சிறிதரன் அவர்களும் ஆசிரியரை வழங்கினார்கள். நிறைவாகக் கணித ஆசிரியர்கள் குழு சார் பில் நன்றி தெரிவிக்கப்பட்டது

# ஆயுதம் கடத்தியோர் பொலிசார் மீது கத்திக்குத்து

(மாத்தறை)

ஆட்டோ ஒன்றில் ஏறி குண்டு துப்பாக்கிகள், இராணுவ சீருடை, கைவிலங்குகள் முதலியவற்றைக் கடத்திச் சென்றதாகக் கூறப்படும் இரண்டு இளைஞர்களை யட்டிய னையில் வைத்து விரக்மனை பொலிசார் கைதுசெய்ய முற் பட்டபோது இப் பொலிசாரை கத்தியினால் குத்திவிட்டுத் தப்பி ஓடினார்கள். அவர் களை கிராமவாசிகள் மடக் கிப்பிடித்து பொலிசாரிடம் ஒப்படைத்தனர்.

# புகைப்பட சேகரிப்பு

யாழ். றோட்டறாக்ட் கழகம் அடுத்த மாதம் நடாத்த உள்ள புகைப்பட கண்காட்சிக்கான புகைப்பட சேகரிப்பு 23ஆம், 24ஆம் திகதிகளில் காலை 9.00 மணி முதல் மாலை4.00 மணி வரை யாழ்ப்பாணம் கம் பன் கோட்டம் நிலையத் தில் நடைபெறும்.

## நரோமாபுற படுவதில் தாமதம்

(யாழ்ப்பாணம்)

திருகோணமலையில்இருந்து புறப்படும் ''நரோமா'' பயணி கள் கப்பல் ஒருநாள் தாமத மாகியே அங்கிருந்து புறப் படும் என சர்வதேச செஞ் சிலுவைச் சங்க வட்டாரங் கள் தெரிவிக்கின்றன.

வாதுவ கப்பல் கொழும் பில் இருந்து புறப்படுவதில் ஏற்பட்ட தாமதம் காரண மாகவே ''நரோமா'' இவ்வாறு தாமதமாகிப் புறப்படுவதாக அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றது. [நி] [பா]

## தேனெடுக்கச்

...க்கள் அணிந்திருந்த சாரங்கள் மூலம் சடலங்களை அடையா ளம் கண்டனர்.

பிரேதபரிசோதனை நடத் திய வைத்திய அதிகாரி துப் பாக்கிக் குண்டுகள் பாய்ந்த தால் ஏற்பட்ட காயங்களால் இருவருக்கும் மரணம் சம்ப வித்துள்ளது எனக் கூறினார். விசாரணையின்போது தமது கணவன்மார் இராணுவத்தின ரின் துப்பாக்கிச் சூட்டினா லேயே இறந்துள்ளனர் எனக் கூறினர்.

## இணைப்புக்

இடம்பெற உள்ளது. இக் கூட் டத்தில் பல முக்கிய விடயங் கள் ஆராயப்பட உள்ளதால் சகல மாணவர்களையும் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொண்டுள்ளனர். [07]

## மாணவர்

கப்பட்ட பொழுதும் 92/93 கல்வி ஆண்டில் 58 மாணவர் களே இம்முறை தகுதியானவர் களாக தெரிவு செய்யப்பட் டுள்ளனர். இம்முறை மாண வர்களின் எண்ணிக்கை வீழ்ச்சி அடைந்தமைக்கு திறமைக் குறைவே காரணம் என பல்க லைக் கழக மானிய ஆணைக் குழு காரணம் கூறுகின்றது. ஆனால்இது உண்மைநிலைக்கு புறம்பானது என பல்கலைக் கழக மாணவர்கள், பேராசிரி யர்கள் மற்றும் புத்திஜீவிகள் கருதுகின்றார்கள். வழமை யாக பல்கலைக்கழகத்துக்கு தேவையான நிதி மாணவர் களின் எண்ணிக்கையின் அடிப் படையிலேயே வழங்கப்பட்டு வருகின்றது. ஆனால் இம் முறை மாணவர்களின் எண் ணிக்கை குறைக்கப்பட்டுள்ள மையால் பல்கலைக்கழகத்துக் கான நிதியும் குறைக்கப்படும் சாத்தியம் இருக்கின்றது. இத னால் பலவித நெருக்கடிகளை பல்கலைக் கழகம் எதிர்நோக்க வுள்ளது'' என்றார்,

இறுதியாக பாதிக்கப்பட்ட மாணவர்கள் சார்பில் ஒருங் கிணைப்புக் குழு ஒன்று உரு வாக்கப்பட்டுள்ளது இதில் பாதிக்கப்பட்ட மாணவர்கள், அவர்கள்தம் பெற்றோர்களும் அங்கம் வகிக்கின்றனர். (07)

## சிறிமாபுர

ருந்து இடம்பெயர்ந்த மக்கள் ஆரம்பத்தில் தச்சன்குளம், வேப்பங்குளம், கோவிற் குடி யிருப்பு பகுதிகளில் குடியேறி யிருந்தனர் எனினும் விமான நிலைய விஸ்தரிப்பையடுத்து இப்பகுதிகள் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்ட பின்னர் இம்மக்கள் சிறிமாபுரம் வந்து குடியேறினர் 1989இல் இப் பகுதியில் 102 குடும்பங்கள் இருந்தண. இவர்கள் பின்னர் இராணுவ நடவடிக்கைகளை அடுத்து வேறுபகுதிகளுக்கு இடம்பெயர்ந்தனர் தற்போது இங்கு தங்கியுள்ள 34 குடும் பங்களில் 23 குடும்பங்களிடம் இக்காணிக்கான அனுமதிப்பத் திரங்கள் உள்ளன.

[யாழ்பபாணம்]

யாழ். குடா நாட்டிற்கான உள்நாட்டு, வெளிநாட்டு தபால்களை இனிமேல் கிரம மான முறையில் அனுப்பு வத ற்கான சகல நடவடிக்கை களையும் பிரதி தபால் அதி பர் நாயக கட்டுப்பாட்டாளர் மேற்கொண்டு வருகின்றார்

யாழ் குடா நாட்டிற்கு அத்தியாவசிய பொருள்களை ஏற்றிவரும் வாதுவ, குமாரி, றுகுணு, மரினால் ஆகிய கப் பல்களில் இராணுவகட்டுப்பாடு அற்ற பகுதிகளுக்கும் 'ஓசன் றேட்' கப்பல் மூலம் இரா ணுவ கட்டுப்பாட்டு பகுதிகளு க்கும் தபால் அனுப்ப ஏற் பாடு செய்யப்பட்டுள்ளதாக பிரதி தபால் அதிபர் நாயக கட்டுப்பாட்டாளர் ஆ. சிவ குலதாசன் யாழ். தபால் உயர் அதிகாரியொருவர் தெரி வித்துள்ளார்.

குமண கப்பலின் கட்டணங் களை சர்வதேச அலகில் செலு த்துமாறு வேண்கோள் விடுத்த தாகவும்இதனை அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் பிரி வில் எயர்கொமடோர் டி.பி. சிறிவர்தன மறுத்துள்ளதால் குமண கப்பலில் தபால் அனு ப்பப்படமாட்டாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

[நி],[பா]

# பிறிமா ஊழியர்கள் வேலைநிறுத்தத்திற்கு திட்டம்

(கொழும்பு)

தமது கோரிக்கைகளை ''பிறிமா'' நிறுவனம் ஏற் காதுவிட்டால் சுமார் 400க்கு மேற்பட்ட ''பிறிமா' தொழிற் சாலை ஊழியர்கள் இம்மாத இறுதி முதல் வேலை நிறுத் தம் செய்ய திட்டமிட்டுள் ளனர்,

வாழ்க்கைச் செலவு அதிக ரிப்பு, இராணுவ அச்சுறுத் தல் போன்ற பல்வேறு கார ணங்களை முன்வைத்து இப் 'பிறிமா'' தொழிற்சாலை ஊழியர் வேலை நிறுத்தத் தில்ஈடுபடவுள்ளனர்' இவர் களுக்கு ஆதரவாக இராஜ கிரியிலுள்ள''பிறிமா'' பாண் நிறுவன ஊழியர்களும் வேலைநிறுத்தத்தில் குதிக்கப் போவதாக தெரிவித்துள் ளனர்.

## யாழ்.

என யாழ் பல்கலைக்கழக செனட் கண்டனம் தெரிவித் துள்ளது.

கொழும்பு பல் கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு 180 மாணவர்களை அனுமதிக்கு மாறு கோரப்பட்டது. ஆனால் மானிய ஆணைக்குழு 185 மாணவரை தெரிவு செய்துள் ளது. பேராதனை மருத்துவ பீடத்திற்கும் மற்றும் றுகணு, களனி மருத்துவ பீடங்களுக் கும் கூடுதலாக ஐந்து பேருக்கு மானியஆணைக்குழு இடமளித் துள்ளது

யாழ். பல்கலைக்கழக மருத் துவ பீடத்திற்கு 200 மாண வரை அனுமதிக்குமாறு கோரிய போதிலும் 60 மாண வர்களை மட்டும் அனுமதிக்க முடியும் என மானிய ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

உயிரியல் விஞ்ஞான பிரி வுக்கு கொழும்பு பல்கலைக் கழகம் 120 மாணவர்களை கோரியபோதிலும் 145 மாண வருக்கு ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது. இப்பிரிவுக்கு யாழ். பல்கலைக்கழகம் 100 மாணவர்களை கோரியபோது 50 மாணவர்களுக்கே மானிய ஆணைக்குழு அனுமதி வழங்கி யுள்ளது.

## ராவய

...வர்கள் விளக்கமளித்துள்ள னர்.

யாழ்தேவி இராணுவ நட வடிக்கையின்போது யாழ்ப் பாணம் வந்திருந்த 'ராவய' பத்திரிகை செய்தியாளர்களே பி.பி.ஸி. சிங்கள சேவைக்கு வழங்கிய மேற்படி பேட்டி எதிர்வரும் 23ஆம், 24ஆம் திகதிகளில் பி.பி.ஸி. சிங்கள சேவையில் ஒலிபரப்பாகவுள் ளது.

# கண்டெடுக்கப் பட்டுள்ளது

7-10-93 அன்று இணுவில் பரராஜசேகரப்பிள்ளை யார் கோயில் முன்றலில் தங்க நகை ஒன்று கண்டெடுக்கப் பட்டுள்ளது. தகுந்த ஆதாரம் காட்டி விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு நடுவப் பணியகத்தில் (குளப்பிட்டிச் சந்தி அருகாமை) பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள் ளப்படுகின்றனர்.

# சாளரம் வெளிவந்தது

'சாளரம்' ஒக்ரோபர் மாத இதழ் வெளிவந்துள்ளது. பொன்விழா கண்ட யாழ். இந்து மகளிர் கல்லூரி, வர லாற்றுநூலில் முரண்பாடுகள், உயிர் கொல்லும் கொலரா, மாவீரன் பண்டாரவன்னியன், கோரீ என்றொரு தீவு, அறி வுலகம் முதலான பல ஆக்கங் களை தாங்கி இவ்விதழ் வெளி வந்துள்ளது

# பொறுப்பாசிரியர் கூட்டம்

யாழ். மாவட்டப் பாட சாலைகள் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் 15வயதுப் பிரிவினரில் கோட்ட மட்டத் தில் முதல் 4 இடங்களையும் பெற்ற பாடசாலை அணி களின் பொறுப்பாசிரியர்களுக் கான கூட்டம் இன்று காலை 9. 30 மணிக்கு யாழ். கல்வித் திணைக்களத்தில் நடை பெறும்.